# உலகத் தமிழர் குரல்

# Ulaka Thamilar Kural

ஒலி - 24 டிசம்பர் 2005 இதழ் - 21

திருவள்ளுவர் ஆண்டு 2036 கலிவருடம் 5107 மார்கழி மாதம் சிலை - திங்கள் சஞ்சிகை 9

அரசியல் கலப்பற்றது Non Political






வெளியீடு :
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
இலங்கைக் கிளை, யாழ்ப்பாணம்
அன்பளிப்பு 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHILDRENS EDUCATION FUNDS INC.

## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

*The Children's Education Trust of Canada*



## A VERY DIFFERENT RESP

**உங்கள் பிள்ளைகளின் கல்வியை நம்பிக்கையுடன் எடுத்துச் செல்லுங்கள்**

**CONTACT : SIVA KANAPATHIPILLAI**

**EARN AIR MILES. R**
**Reward miles**
**WITH CET**

E-mail : s kanapathypillai @ cefi.ca

**Tel : 416 - 438 0660, 416 - 438 3578**
**Cell : 416 - 899 6044**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் குரல்

ஆசிரியர், திரு. ஆ. சண்முகலிங்கம்
மார்கழி மாதம் 2005 (டிசம்பர்)

# எண்ணம்

**வாழ்வியல் மாண்புகளால் மனிதனும் தெய்வமாகலாம்.**

மனிதன் ஒருவன் அரசன் வீட்டில் பிறக்கலாம். அல்லது ஓர் ஆண்டியில் குடிசையில் பிறக்கலாம். சில சமயம் அவன் பணக்காரன் வீட்டிலும் உதிக்கலாம். ஏழையொருவன் இடத்திலும் பிறந்திடலாம். அவன் எந்த இடத்தில் பிறந்தாலும் குழந்தையாகத்தான் இந்த உலகத்துக்கு வருகிறான். அப்போது அவன் உலகம் அறியாத ஒரு பிள்ளையாக இருக்கிறான். அவன் வளர்ந்து முழுமனிதனாக வேண்டுமாயின் அவன் பிறந்த சூழலில் வாழ்க்கை வசதிகள் வாழ்வுத்துணை நலன்கள் கிடைப்பது முக்கியம். வசதியுள்ளவன் வீட்டுப் பிள்ளைக்கு வாழ்க்கை வசதிகள் எல்லாம் குடும்பத்தில் கிடைத்துவரும். வறியவன் வீட்டுப் பிள்ளைக்கோ அத்தகைய வசதிகள் கிடைக்காமல் இருக்கும் அல்லது பற்றாக் குறைகள் அமைந்து கஷ்டங்கள் இருந்து வரவும் கூடும்.

மனிதன் குழந்தையாக இருந்து வளர்ந்து வரும் நிலையில் பல விடயங்களை எதிர் நோக்கவேண்டியவனாகிறான். உணவும் நல்ல பராமரிப்பும், பெற்றோர் கவனிப்பும் தாயின் அன்பும் பாசமும் உறவினர் நேசமும் கிடைக்க வேண்டும். சிலபோது செவிலித்தாய் அரவணைப்பில் அவன் வளரவும் நேரிடலாம். சிலவேளை இத்தகைய உதவி ஆதரவு குறைவான அளவிலும் ஒரு மகவு வளர்க்கப்பட்டு வளரவும் கட்டாயம் தோன்றலாம்.

பிள்ளையொருவன் வளர்ந்து உலகம் தெரியும் நிலை, புரியும் காலம் வரை அவனுக்கோ, அவளுக்கோ வீட்டில் நல்ல பழக்க ஒழுக்கங்கள் போதிக்கப்பட வேண்டும். பாலர் பள்ளிக்குப் போகும் வயதில் அவன் தவறாமல் அங்கே சேர்க்கப்படுவதுடன் அங்கே எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்படுவது அவசியமாகின்றது. பள்ளியில் அவன் ஆசிரியர்களின் துணையில் வழிகாட்டலில் வாழும் காலத்தில் ஏனைய சிறார்களுடன் பழக ஆரம்பிக்கிறான். அப்போது அவன் அங்கே மனிதர்களின் வித்தியாசங்கள் நடை உடை பாவனைகள் குணவியல்புகள் போன்றவற்றை அறிகிறான்.

எந்தவொரு பிள்ளைக்கும் வீட்டில் பெற்றோர் நல்ல பழக்கங்கள், நெறிமுறைகளை சொல்லித் தந்து வழிகாட்டுவது இன்றியமையாதாகும். அதே நேரம், பள்ளிக் கூடங்களில் நல்ல ஒழுக்க சீலங்கள் புகட்டி நல்வழி காட்டுவது ஆசிரியர்களின் கடமையாகும். இந்த இரண்டு நிலையங்களும் மனிதன் ஒருவன் தனது நல்ல எதிர்கால வாழ்வுக்கு அடித்தளமாக விளங்குவதைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை எவனும் வளர்ந்து வரும் பருவத்தில் இளமையில் நல்லவனாக வளர வழிகாட்டுவது அவசியமாகும். மேலும், சமய விடயங்கள் கற்பிக்கப்படவதும். தெய்வ நம்பிக்கை ஊட்டி வருவதும் தேவையாகின்றன. மனித நேயம், அன்பு கருணை போன்ற நல்ல சீலங்கள் வாழ்வுக்கு சிறப்பை அளிக்கும் என்ற உண்மையைச் சிறார்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய சமூக வாழ்வில் மாறி வரும் நாகரிக தாக்கங்கள், பெற்றோரிடமும், ஆசிரியர்களிடமும் இளமையில் கற்றுக் கொண்ட நல்ல ஒழுக்கங்களை பலர் காலப்போக்கில் மறந்து போய் வழிதடுமாறி வாழும மனிதர்களை நாம் காணலாம்.

மேலும் தற்காலத்தில் பெற்றோர் பலர் பிள்ளைகளில் கவனம் எடுப்பதில்லை. கல்விச் சாலைகளில் ஆசிரியர்கள் சிறார்களின் மாணவர்களின் ஒழுக்க விடயங்களில் கவனம் எடுக்காமல் இருக்கும் நிலமையும் உள்ளது. இந்தக் காரணங்களால் வளர்ந்து வரும் மனிதன் வாழ்வில் ஒழுங்கீனமாக நடந்து தடம்புரள்வதை கண்ணுறலாம். இதனால் அவன் தானும் கெடுவதுடன் அடுத்த மனிதனுக்கும் தீங்கானவனாக மாறுகிறான். இந்த நிலைமை பிள்ளை வளர்ப்பிலும், பள்ளியில் அமையும் போதனையில் விடப்படும் தவறுகளாகவும் இருப்பதைக் காணலாம். இது கடமை தவறுவதும் பொறுப்பற்ற செயல்பாடாக இருப்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

மனித வாழ்வியல் விடயங்கள் செயல்பாடுகள் யாவும் எப்போதும் மாறிக் கொண்டே வரும். இது இயற்கையான நிகழ்வாகும். குழந்தையாக உதித்தவன் வளர்ந்து சில ஆண்டுகளில் சிறுவனாகி மாணவனாகிறான். பின்னர் 18 வயதில் மேல் இளைஞனாகி விடும் அவன் சில ஆண்டுகள் போய்விட வாலிபப் பருவத்தை எட்டுகிறான். 25 வயதிலிருந்து 45, 50 வயது வரை வாலிபனாக வாழ்கிறான். பின்னர் இந்த நிலையில் மாற்றங்கள் தோன்றி படிப்படியாக மூப்பு நிலை வளர்ந்து முதியவனாகி விடுகிறான். இந்த மாற்றங்களிலிருந்து எந்த மனிதனும் தப்பி வாழ முடியாது. அவனவன் தலைவிதிப்படி நியதிப்படி அவர்களின் வாழ்நாள் முடிந்து விடுகின்றது. இந்த வாழும் காலம் என்கிற வாழ்நாள் மனிதன் எவனுக்கும் வீண் நாளாகித் தொலைந்து விடக்கூடாது அல்லவா?

மனிதப் பிறவி எடுத்த ஒருவன் வாழும் போது அவனுடைய வாழ்வியல் காரணிகள் சீராக அமைவதற்குப் பல விடயங்கள் அவன் அனுசரித்து வாழ வேண்டியுள்ளது அந்த நிலையில் மனிதனின் வாழ்வுக்கு உதவி நன்மை தரக் கூடிய செயல்பாடுகள் காரணிகள் முக்கியமாக அமைய வேண்டும். அவன் வாழ்வியல் தொடர்பான பல விடயங்களில் அவசியமான கட்டுப்பாடுகள் அமைத்துக் கொள்வதால் அவன் நன்மை அடையலாம்.

### சீரான மனித வாழ்க்கைக்குத் தேவையான துணை நலன்கள்

1. பொருத்தமான கட்டுப்பாடான உணவுப் பழக்கம்
2. நல்ல சுகாதாரமான பழக்கங்களைப் பின்பற்றி வாழ்தல்.
3. அவசியமற்ற கனவுகள் கற்பனைகளை வளர்த்து மனதை அழுக்காக்கிப் பாழாக்காமல் பாதுகாத்து வாழப்பழகுதல்.
4. உள்ளத்தில் நல்ல எண்ணங்களை வளர்த்து செயல்பட்டு வாழ்தல்
5. தனது மனதுக்கும் உடலுக்கும் தீங்கு ஏற்படாமல் சிந்தித்துச் செயல்படுதல்
6. தன்னைப் போல் மற்றவர்களையும் மதித்து வாழ்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மற்ற மனிதர்களிலும் உயிர்களிலும் அன்பாக நடந்து வாழ்தல்.
8. பெற்றோரை, குடும்பத்தவரை உறவுகளை மற்றவர்களை நேசித்து இயன்ற உதவி செய்து வாழ்தல்.
9. ஆசிரியரை, பெரியோரை, முதியோரை, நோயாளரை, ஞானசீலர்களை தெய்வத்தை மதித்து வாழ்தல்.
10. படிக்கும் காலத்தை வீணடிக்காமல் தவறாமல் கற்றலை மேற்கொள்ள வேண்டும்.
11. உழைக்கும் காலத்தில் உழைத்து வருமானம் தேட வேண்டும்.
12. சோம்பலைத் தவிர்த்து வாழ வேண்டும்.
13. செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். சாதனைக்கு இது வழிவகுக்கும்.
14. சமுதாயத்தில் நல்லிணக்கத்துடன் பழகி வாழ்தல்.
15. நல்ல நண்பர் ஒருவர் இருவரைத் தேடிக் கொள்ள வேண்டும்.
16. வாழ்வில் பணம் பொருள் வசதிகள் அதிகமாகும் போது அவற்றை குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் உதவி செய்ய வேண்டும்.
17. அளவுக்கு மிஞ்சிய செல்வம் சேரும் போது சமுதாய மக்களின் வாழ்வுக்கு உதவி செய்ய வேண்டும்.
18. மனிதனின் உயிர்வாழ்வுக்கு வழிகாட்டுதல் வருமானத்தைத் தேடி வாழ உதவி செய்தல்
19. நல்ல நூல்களை வாசிக்க வேண்டும்.
20. பொது அறிவை வளர்த்தல் பகுத்தறிவைப் பேணி வாழ்தல்.
21. நீதி நியாயங்கள் தர்மங்களுக்கு மதிப்பளித்துச் செயலாற்றுதல்
22. சமய சமூக முரண்பாடுகள், குரோதங்களை விலக்கி வாழ்தல்.
23. குடும்ப வாழ்வில் கணவன் மனைவி பிள்ளைகளுடன் ஒற்றுமையுடன் அன்பு கொண்டு வாழ்தல்.
24. தான் பிறந்த குடும்பத்தை, வாழ்ந்த மண்ணை, மறவாமல் தொடர்புறவில் வாழ்தல்
25. தாய் மொழிப் பற்றும் இனப் பற்றும் மதித்து வாழ்தல்.
26. நாட்டில் மக்கள் வாழ்வுக்குத் தேவையான உணவுப் பொருட்களை கிடைக்க வழி செய்தல் அல்லது அவற்றை உற்பத்தி செய்ய ஆவன செய்தல்

## மானுடன் வாழ்வில் விலக்கி வைக்க வேண்டியவை

1. மதுபாவனை புகைப்பிடிக்கும் பழக்கம் கெட்டவர் சகவாசம். தீய கூட்டாளிகள் போன்றவற்றை கைவிட வேண்டும்.
2. பல பேருடன் நட்புக் கொண்டு உல்லாச சல்லாபங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து வாழ வேண்டும்.
3. சுகபோக விடயங்களுக்கு கெட்ட மனிதர்களின் வலையில் வீழாமல் கவனமாக இருக்க வேண்டும்.
4. ஊதாரித்தனத்தைக் கைவிட வேண்டும்.
5. அநீதிக்கும் அநியாயமான விடயங்கள் பாதகமான விடயங்கள் போன்றவற்றுக்கும் துணை போகலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வலியோரை வாழ்த்துவதையும் மெலியோரைத் தாழ்த்தி வருத்துவதையும் தவிர்க்க வேண்டும்.

7. பொய்பேசுதல், களவு, சூது வாது போன்ற விடயங்களில் வீழ்ந்து அழியாமல் தற்காத்து வாழ்தல்.

8. ஆடம்பரமோகம், டாம்பீக உல்லாச வாழ்வியல் விடயங்களை இயன்றவரை விலக்கி வாழ்தல்.

9. அடாவடித்தனம், அட்டகாசம் புரிதல் செயல்பாடுகளில் ஈடுபடாமல் மனித நேயம் கொண்டு வாழப்பழகுதல்.

10. பொது இடங்களில் நேர் சீராக செயல்படல்.

11. நாம் வாழும் சூழலை மாசுபடுத்தலாகாது, நீர், காற்று மண், மரம் செடி, கொடிகள், ஆறு, கேணி, கடல், சமுத்திரம்யாவும் இயற்கை தந்த செல்வங்கள் இவற்றை நாம் மாசுபடுத்தாமல் அழிக்காமல் போற்றி வாழ வேண்டும்

இப்படியான பல குண இயல்புகளை மனிதன் அறிந்து. தெரிந்து வளர்த்து, பின்பற்றி வாழ்வதால் வாழ்வில் இன்பமும் நிம்மதியும் கிடைத்து வாழும் ஏது நிலை உண்டாகும்.

ஆகையால், மனிதன் யாராக இருந்தாலும் ஆணோ பெண்ணோ தனது வாழ் நாளை வீண் நாட்களாக்கி நீண்ட காலம் இந்த நிலவுலகில் வாழக்கூடிய நன்மையை அழித்து இழந்து விடக் கூடாது. மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் அன்பின் வழியில் பண்பின் பாதையில் அமைந்து வர வேண்டும். இவன் உலகில் பிறந்து நுழையும் போது எதனையும் கொண்டு வருவதில்லை உலகை விட்டுப் போகும் போதும் எதையும் கொண்டு போவதில்லை.

மனிதனாகப் பிறந்த ஒருவன் வளர்ந்து முழு மனிதனாக வாழும் போது விலங்குகள் போல் ஆகிவிடலாகாது. அத்தகு நிலை தோன்றும் போது, மனித நீதி, பிழைத்து விடும் தெய்வ நீதி பிசகிவிடும் தெய்வம் அப்படியானவனுக்கு தண்டனை தரச் சந்தர்ப்பத்தைப் பார்த்திருக்கும். ஆகையால் மனிதன் தன்னிலும் மற்ற உயிர்களிலும் அன்புள்ளவனாக வாழப் பழகிக் கொள்வது நல்ல பண்பாடாகும். அன்பே சிவம், அன்புதான் மகா சக்தி என்று ஆன்றோர் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் மனிதப் பிறவியில் அமையும் வாழ்வியல் விடயங்கள், உன்னதமாக விளங்க வேண்டுமானால், மனிதன் எவனும் அன்புடன் கூடிய பண்பாடுகளைப் பின்பற்றி வாழ வேண்டும். அப்போது தான் மனிதன் என்பவன் தெய்வமாகிறான். மதிப்புடனும் மாண்புடனும் விளங்கி உலகில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக அவன் உருவாகிறான்.

அன்புடன்,
ஆசிரியர்,
ஆ. சண்முகலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சி

**தமிழ்ப்பணிச் செம்மல் அகிலத் தலைவர்**

**திரு.சி. செல்லையா அவர்கள் - கனடா**

**த**மிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் உலகெலாம் 8 கோடிக்குமேல் செறிந்து வாழ்கின்றனர். இவர்களை 5 பிரிவினர்களாகக் கணிக்கலாம்

1. தமிழ்த்தாய் நிலங்களான இந்தியாவில் தமிழ்நாடு, புதுவை இலங்கையில் தமிழீழம். இவர்களின் எண்ணிக்கை ஏழு கோடிக்கு மேல் என மதிப்பிடலாம்.
2. இற்றைக்கு 145 வருடங்களுக்கு முன் காலனித்துவ அரசுகளால் குறிப்பாக ஆங்கிலேயரால், அவர்கள் அரசாட்சி செய்த நாடுகளில் தங்கள் தேவைகளுக்காக குடியேற்றப்பட்டவர்கள், அப்படியான நாடுகளில் தென்னாபிரிக்கா, மலேசியா, மொறிசியசு, றெயூனியன், சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகள் முக்கிய மானவை இவர்களின் எண்ணிக்கை ஒரு கோடிக்கு மேல் மதிப்பிடலாம்.
3. ஆங்கிலேயர் ஆட்சியின் காலத்தில், மேற்படிப்பிற்காக இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நியூசீலாந்து போன்ற நாடுகளில் குடியேறியவர்கள்.
4. ஒப்பந்த அடிப்படையில் பல நாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்பவர்கள்.
5. 1983 இனக்கலவரத்தின் பின் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக, ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் குடியேறியவர்கள். (2,3,4,5,) பிரிவினரின் எண்ணிக்கை 1/2 கோடிக்கு மேல் மதிப்பிடலாம்.

இவர்கள் அனைவரின் மத்தியில் தமிழ்மொழி வளர்ச்சி, தமிழ்ப்பண்பாட்டைப் பேணி காப்பது உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பணியாக உள்ளது. ஒவ்வொரு பிரிவினர் மத்தியிலும், எமது இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்கு வெவ்வேறு யுக்திகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

முதலாவது பிரிவில் தமிழ் நாட்டில் 6கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் மத்தியில் பெருந் தொகையான தமிழ்ப் புலவர்கள், தமிழ்க் கல்வி மான்கள் உள்ளனர். ஆனால் தற்பொழுது நிலவிவரும் ஆங்கில மோகத்திற்கு, எதிராக அவர்களால் செயற்பட முடியவில்லை. காரணம் அரசாங்கம் ஆங்கிலத்திற்கு முதலிடம், தமிழுக்கு இரண்டாம் இடமும் கொடுத்திருப்பது, மக்கள் மத்தியில் தங்கள் பிள்ளைகள் ஆங்கிலம் கற்று வெளிநாடுகளில் வேலை செய்து கைநிறைய சம்பாதிக்க வேண்டுமென்ற நப்பாசை ஆங்கிலத்தில் உரையாடுவது புகழ் என நினைப்பது, மேல் நாட்டுக் கலாச்சாரம் வேகமாகப் பரவுவது, தமிழ் நாட்டின் பொருளாதாரம் பிறரின் கையில் இருப்பது. இந்நிலையில் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம், தமிழ் நாட்டில் வளரவேண்டுமானால், தமிழ் மொழியில், தமிழ்ப்பண்பாட்டில் ஆர்வமுள்ளவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்து, தங்கள் செலவில் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி மக்கள் மத்தியில் தமிழ் உணர்ச்சியை ஊட்ட வேண்டும். இப்பணியை முன்னெடுத்துச் செய்வதற்கு அங்குள்ள தமிழ்ப்புலவர்களாலும், தமிழ்க் கல்வி மான்களாலும் முடியவில்லை. காரணம் அவர்களின் பெருளாதார நிலை. தற்பொழுது ஒரளவு வசதி படைத்தவர்கள் சிலர் தங்கள் தமிழ் மொழியிலுள்ள ஆர்வத்தால் மாநிலங்கள் தோறும், மாவட்டங்களிலும், உப கிளைகள் அமைத்து வருகின்றனர். நாளடைவில் இந்தியக்கிளையில் பெரும் தொகையில் இளைஞர்கள் சேர்க்கப்படுவார்கள் என நம்பக் கூடியதாக இருக்கின்றது.

புதுவை மாநிலத்தின் தமிழ் மக்கள் மத்தியில், தமிழ் உணர்வு, தமிழ் நாட்டிலுள்ளவர்களிலும் கூடவாகக் காணப்படுகிறது. அங்கு தற்பொழுது கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் வலுவான கிளையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியக் கிளைத் தலைவர் கோபுடோ கிருஷ்ணமூர்த்தியும், புதுவைக் கிளைப் பொறுப்பாளர் சட்டநிபுணர் வை. நாராயணசாமியும் இணைந்து, இந்தியாவில் எமது இயக்கத்தை ஒரு வலுவான இயக்கமாகக் கட்டியெழுப்புவார்களென நம்பலாம்.

அடுத்த தமிழ்த்தாய் நிலமான தமிழீழத்தில் தமிழ் மொழிப்பாவனைக்குக் குறைவில்லை. அண்மையில் தென்னாபிரிக்கக் கிளையினரின் வேண்டுகோளுக்கமைய அவர்களுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடச் சென்று அதன் பின் கிளிநொச்சிக்கும் சென்றிருந்தேன். கிளிநொச்சிப் பகுதி மிகவேகமாக சகலவிடயங்களிலும் முன்னேறிவருவதைக் காணக்கூடியதாக இருந்தது. அங்குள்ள பெயர்ப் பலகைகளைப் பார்க்கும் பொழுது, அழகிய தமிழில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தேன். ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பானவர்களைச் சந்தித்து, அங்கே நடைபெறும் பணிகளைப் பற்றிக் கேட்டறிந்து நேரில் சென்றும் பார்வையிட்டோம். தென்னாபிரிக்காக்கிளை, கணிசமான பண உதவியை நல்கினர். கனடாவும் ஒரு சிறு தொகையை அன்பளித்தது.

மேற்குறிப்பிட்ட இரண்டாவது பிரிவினரில் தென்னாபிரிக்காவும், மலேசியாவும் முக்கியமானவை. தென்னாபிரிக்க மக்கள், காலப்போக்கில் தமிழ் மொழியை மறந்து விட்டனர். அவர்களின் வீட்டு மொழி ஆங்கிலமாக மாறிவிட்டது. எட்டாவது உலக மாநாட்டை 2001, டிசெம்பரில் நடத்திய பொழுது எமது இயக்கத்தின் கிளை இருக்கவில்லை. அம்மாநாட்டைத் தென்னாபிரிக்கத் தமிழர் கூட்டமைப்பின் உதவியுடன் நடத்தினோம். அம்மாநாட்டின் பின், அங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் உணர்ச்சி உருவாகியுள்ளது. இன்று தென்னாபிரிக்காக் கிளை, திரு. கிறிஸ்கிஸ்ரன் தலைமையில் வலுவான கிளையாக இயங்குகிறது. தென்னாபிரிக்கத் தமிழ் மக்கள் தமிழ் மொழியைத் தாங்களும் தங்கள் பிள்ளைகளும் கற்று உலக தமிழ் சமுதாயத்துடன் இணைந்து தமிழர்களாக வாழ வேண்டுமென்று உறுதி பூண்டுள்ளார்கள். கிளிநொச்சியில் அவர்கள் தமிழில் உரையாட எடுத்த முயற்சிகளிலிருந்து அவர்களின் ஆவலை அறியக் கூடியதாக விருந்தது. இந்தச் செயற்பாடு என்பது எமது இயக்கத்திற்கு பெரும் வெற்றியே எனக் கருதலாம்.

மலேசியாவில் தமிழ் மொழிப் பாவனை வளர்ந்து கொண்டே போகிறது. திரு. ம.மணிவெள்ளையன். தலைமையில் தமிழ் மொழி வளர்ச்சிக்கான பல பணிகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொறிசியசில், காலஞ்சென்ற பெரியார் தங்கணமுத்து தமிழுக்காக அரும்பாடுபட்டவர். எமது இயக்கத்தின் இரண்டாவது உலக மாநாடு மொறிசியசில் சிறப்பாக நடைபெற்றதை எமது அங்கத்தவர்கள் அறிவார்கள் இன்று திரும்பவும் மொறிசியசில் எமது இயக்கக் கிளையை வலுப்படுத்த முயற்சிகள் எடுத்துள்ளேன். திரு.கிறிஸ்கிஸ்ரன், தென்னாபிரிக்கா, மொறிசியஸ், ரெயூனியன் ஆகிய நாடுகளை இணைத்து அப்பிராந்தியத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆவன செய்து வருகிறார். திரு. சிவன்செட்டி மொறிசியசில் பேராசிரியராக இருப்பவர் முழு ஆதரவையும் வழங்கி வருகிறார். சிங்கப்பூரிலும், இலங்கையில் மலையக மக்களும் தமிழ் மொழியில் பற்றுடையவர்களாகவும் ஆற்றலுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இலங்கையில் மலையகத் தமிழர்களை எமது இலங்கைக் கிளையில் இணைத்து செயற்படுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. சிங்கப்பூரில் தற்பொழுது ஒரு சிறு குழு எமது இயக்கத்தின் சார்பில் இயங்குகிறது. இக்குழுவை விரிவு படுத்தி வலுவான கிளையை உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

மூன்றாவது பிரிவினர் மத்தியில் தமிழ் மொழிப் பாவனை வெகுவாகக் குறைந்து விட்டது. இதை நான் இங்கிலாந்தில் வசிக்கும் தமிழர்களிடையே பார்த்தேன். அவர்களின் வீட்டு மொழி ஆங்கிலமாக மாறிவிட்டது. தற்பொழுது பல இடங்களில் பிள்ளைகளுக்கு தமிழ் மொழி கற்பிக்கிறார்கள். இவ்வகுப்புகள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறுகின்றன. ஆனால் சிலர் நடத்தும் வகுப்புக்கள் தங்கள் பணவருவாய்க்காக நடத்தும் வகுப்புகளாக இருக்கின்றன. எமது இயக்க இங்கிலாந்துக்கிளை இவ்விடத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் தற்பொழுது எமது இயக்கக் கிளை செயற்படவில்லை. எமது இயக்கத்தின் 5வது உலகமாநாடு சிட்னியில் டாக்டர் சிறீஸ்கந்தராசாவின் தலைமையில் நடைபெற்றது. அவர் ஐரோப்பிய நாடொன்றிற்கு சென்ற பின் அக்கிளை இயங்கவில்லை. அக்கிளையைத் திரும்பவும் கட்டியெழுப்ப வேண்டும்.

நியூசிலாந்தில் எமது கிளை மிகவும் துரிதமாக செயற்படுகின்றது. டாக்டர் இராசநாதன் இக்கிளை வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றுகிறார். எமது இயக்கத்தில் முறையாக இயங்கும் கிளைகளில் நியூசிலாந்து கிளை முக்கிய இடத்தை வகிக்கின்றதென்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன். அமெரிக்காவில் எமது இயக்கக்கிளை உருவாக்கப்படவில்லை. அமெரிக்க ஒன்றியம் உருவாக்க எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை.

நான்காவது பிரிவினர் மத்தியில் தனிப்பட்ட சிலர் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்க்கும் தமிழர் மத்தியில் கிளைகள் உருவாகவில்லை.

ஐந்தாவது பிரிவினரில், இலங்கைத் தமிழர்கள் தான் முக்கியமானவர்கள். 1983 இனக்கலவரத்தின் பின் ஐரோப்பிய நாடுகளிலும், வட அமெரிக்காவிலும் அகதிகளாகக் குடியேறியவர்கள். அதிகளாகச் சென்றவர்கள் தமிழ் மொழி நன்கு தெரிந்தவர்கள். அவர்களது பிள்ளைகள் தாங்கள் வசிக்கும் நாட்டு மொழியை கற்கிறார்கள். அவர்களுக்குத் தமிழ் மொழியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார் தான் கற்பிக்க வேண்டும். வீட்டு மொழி தமிழாக இருக்க வேண்டும். எமது இயக்கத்தின் ஐரோப்பிய கிளைகள். இவ்விடயத்தில் கவனம் செலுத்துகின்றனர். ஐரோப்பிய நாடுகள் இவர்களுக்குத் தங்கள் நாட்டுக் குடியுரிமை வழங்குவதில் தயக்கம் காட்டிவருகின்றன. இலங்கை இனப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் பட்சத்தில், அந்தந்த நாட்டின் குடியுரிமை பெறாதவர்கள் அனைவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். அவர்கள் இலங்கையில் திரும்பவும், தமிழர் மத்தியில் வாழ வேண்டியவர்கள், ஆகவே அங்குள்ள பிள்ளைகள் தமிழ் மொழி அறிவுடையயவர்களாக இருப்பது அவசியம். கனடா நாட்டில் வசிக்கும் தமிழர்கள் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் திரும்பி அனுப்பப்பட மாட்டார்கள். காரணம் கனடா, அரசாங்கம், இலங்கைத் தமிழர் சிறந்த உழைப்பாளர் என்பதை உணர்ந்ததனாலும் கனடாவுக்கு வேலையாட்கள் தேவை என்பதாலும் தான் ஆகவே தான் கனடாவில் வாழும் தமிழர்கள் இலங்கையிலுள்ள தங்கள் அசைவு, அசைவற்ற சொத்துக்களை விற்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் அச்சொத்துக்களை வாங்குகிறார்கள். கனடாவில் வாழும் தமிழர் மத்தியில், தமிழ் மொழிப் பாவனை குறைந்து கொண்டே போகிறது. சில பெற்றார் தங்கள் பிள்ளைகள் தமிழைப் படித்து என்ன இலாபமடையப் போகிறார்கள் என்ற பிழையான போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளையே பாவிக்கத்தவறுகிறார்கள். எமது இயக்கக் கனடாக்கிளை வருடா வருடம் பிள்ளைகள் மத்தியில் திருக்குறள் போட்டிகள் நடத்திப் பரிசில்கள் வழங்கி ஓரளவு தமிழ் மொழி உணர்ச்சியை ஊட்டுகின்றனர். கனடாவில் பரத நாட்டிய வகுப்புக்கள் மூலைக்கு மூலை நடை பெறுகின்றன. பெற்றோர் தங்கள் பெண் குழந்தைகள் பரத நாட்டியம் கற்க வேண்டும், அரங்கேற்றம் வைக்க வேண்டும் அதற்கு எவ்வளவு செலவானாலும் செலவு செய்யத்தயாராக உள்ளனர். ஆனால் இப்பிள்ளைகளின் தமிழ் அறிவு அநேகரிடம் மிகக் குறைவு பயிற்சிகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன.

தமிழ் மொழிப் பாவனையைப் பெருக்குவதற்கான வழி முறைகளை ஆராய்ந்து அவற்றை செயற்படுத்த வேண்டிய பணி எமது இயக்கத்தின் கனடாக் கிளையைச் சார்ந்ததே.

ஆகவே எமது இயக்கத்தை தமிழ்தாய் நிலங்களான, தமிழ்நாடு, புதுவை, தமிழீழம் ஆகிய இடங்களில் விரிவுபடுத்தி உறுதியுடனும் வேகமாகவும் இயங்க வைக்க வேண்டும். இவ்விடங்களிலுள்ள கிளைகள் தான் தமிழ் மொழி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்ற வேண்டும். அடுத்த தாக தென்னாபிரிக்கா, மலேசியா மொறிசியஸ் போன்ற நாடுகளில் வாழும் தமிழர் மத்தியில் தமிழ் மொழிப் பாவனையைப் பெருக்க வேண்டும். அங்குள்ள கிளைகளுக்குத் தமிழ்த்தாய் நிலங்களிலுள்ள கிளைகள் உதவ வேண்டும். வளர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள், பொருளாதாரத்தில் குன்றிய நாடுகளில் வாழும் தமிழர் மத்தியில் செயற்படும் எமது இயக்கக் கிளைகளுக்கு பண உதவி வழங்க வேண்டும். தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தமிழனாக வாழ வேண்டும் மென்ற மன உறுதி ஒவ்வொரு தமிழனிடமும் உதிக்க வேண்டும். உலகத்தமிழ்ச் சமுதாயம் ஒரு உன்னதமான சமுதாயமாக வாழ உலகத் தமிழ்ப்பண்பாட்டும் இயக்கம் தன்னாலான பணிகளைச் செய்யுமென்று கூறி விடை பெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. சி. செல்லையா அவர்களின் தாயக தமிழகப் பயண அனுபவங்கள்.

## -புதுவை இராமன் -

கடந்த மாதங்களில் தாயகத்துக்கும் தமிழ் நாட்டிலும் உள்ள சென்னை, புதுச்சேரி மற்றும் வேலூர் ஆகிய இடங்களுக்குச் சென்றும் இலங்கையில் நடைபெற்ற சேக்கிழார் மாநாட்டிலும் பங்கேற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. சி. செல்லையா அவர்களுடன் ஒரு நேர்காணலைக் கீழே தருகிறேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து தமிழ் மொழிக்கும், தமிழர்களின் உயர்விற்கும் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் பயணித்தும். தாயகத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவு மீட்புப் பணிகளுக்குத் தொடர்ந்து சேவையாற்றி அனைவரின் பாராட்டுதலை தலைவர். தமிழ்ச் செம்மல் திரு. சி. செல்லையா அவர்கள் பெற்றுள்ளார்.

அவர் மேற்கொண்ட பயணங்களின் நோக்கம். பற்றியும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அமைப்பு பற்றிய ஒரு அறிமுகமாக அதன் செயல்பாடுகள், வளர்ச்சி உலக அரங்கில் நடத்திய மாநாடுகள் அதன் மூலம் அடைந்துள்ள வளர்ச்சிப் பணிகளைப் பற்றி அவர் எடுத்துக் கூறினார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முதன் முதலாக 1974ம் ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த பிரபல இலக்கிய வாதியான சாலை இளந்திரையின் அவர்களைத் தலைவராகக் கொண்டு காலஞ் சென்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் போன்றோரின் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது. அவரது மறைவுக்குப் பிறகு தலமைப் பொறுப்பேற்ற மலேசியாவைச் சேர்ந்த திரு.ஆர்.வீரப்பனார் இவ்வியக்கத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தார் ஆனால் உ.த.ப இயக்கம் மலேசியாவில் சட்ட பூர்வமாக பதிவு செய்யப்படவில்லை. அங்கு பதிவு செய்யப்பட்டது. மலேசிய தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்.

உ.த.ப இயக்கத்தின் 6 ஆவது மாநாட்டை கனடாவில் நடத்துவதற்கு முற்பட்டு 1995 ஆம் ஆண்டு கனடாக் கிளை ஒன்ராறியாயோ அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக நான் பொறுப்பேற்றேன். 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆவது உ.த.ப இயக்க மாநாட்டை மெற்றோ ரொரண்டோ கொண்வென்சன் சென்ரரில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. அதன் பின் 7 ஆவது மாநாடு சென்னையில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்றது. இம்மாநாட்டில் உலகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றுவரையும் இவ்வியக்கத்தின் தலைவராக உள்ளேன் 2000 ஆம் ஆண்டு முதல் கனடாக் கிளை தலமையகமாகக் கொண்டு சட்ட பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு எனது தலைமையில் இயக்கத்தின் அனைத்துப் பணிகளும் பிற நாடுகளில் உள்ள கிளைகளோடு சேர்ந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழ்ர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்விற்கும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. முக்கியமாகத் தமிழர் குடும்பங்களில் உள்ள தாய்மொழியை மறவாமல் தமிழ்மொழியைக் கற்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி வருகிறது. இதற்குப் பிறகு 8 ஆவது மாநாட்டை தென் ஆபிரிக்காவில் உள்ள டர்பன் நகரில் 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடத்தி தென் ஆபிரிக்காத் திழ் மக்களிடையே தமிழ் மொழி ஆர்வத்தை மேலோங்கச் செய்ய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன தமிழகத்தில் உள்ள புதுச்சேரியில் 2004ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ஆவது உலக மாநாட்டை சிறப்பாக நடத்தி இவ்வியக்கத்தின் எதிர்காலத் திட்டங்களுக்கான செயல் நிமித்தம் கடந்த மாதங்களில் ஒரு பயணத்தை மேற்கொண்டேன்.

## தாயகப் பயணம்.

தென்ஆபிரிக்காவில் உள்ள உ.த.ப இ.கிளை தாயகத்தில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழீழ மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்காக 150000 றெண்ட் (20 லட்சம் ரூபா) நிதி திரட்டி அதை தாயகத்தில் வழங்கிட என்னையும் அழைத்திருந்தனர். அவர்களின் அழைப்பை ஏற்று கடந்த ஜூன் மாதம் 27ம் திகதி இலங்கை சென்று தென் ஆபிரிக்கக் கிளையின் தலைவர் திரு.கிறீஸ் கிஸ்ரன் அவர்களை இந்த நிதியை உரியவர்களிடம் வழங்க ஏற்பாடு செய்தேன். கனடா உ.த.ப. இன் சார்பில் 1000 டொலர் தொகை வழங்கினேன. இலங்கை அரசு எந்தவிதமான ஆக்க பூர்வமான காரியங்களைச் செயல்படுத்தாத நிலையில் எம் போன்ற பல்வேறு தொண்டு நிறுவனங்கள், பிறநாட்டில் உள்ள தமிழ் அமைப்புக்கள் தான் மீட்புப் பணிகளுகளுக்கான அனைத்து உதவிகளையும் வழங்கி தற்போது ஒரு சுமுகமான வாழ்க்கையை நம் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக வீடுகள், கல்வி நிலையங்கள் மருத்துவ வசதிகள் தொழில் துறை என வளர்ச்சிப் பணிகளில் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளன. உ.த.ப இ.தலைமையகத்தின் மக்கள் தொடர்பாளரும், கனடாவில் பிரபல கீதவாணி வானொலி நிலைய இயக்குனருமாகிய திரு.ஆ.நடாராஜ்குமார். அவர்களும் இந்த நல்லெண்ணைப் பயணத்தில் பங்கு கொண்டார் எங்கள் குழு இலங்கையில் தாளையடி செம்பியன் பற்று முல்லைத்தீவு போன்ற கடலோரப் பகுதிகளுக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிவாழ் மக்களை சந்தித்து ஆறுதலும் உதவிகளும் வழங்கியது.

இதன் பின் உ.த.ப இ. இலங்கைக் கிளையின் அழைப்பில் தென் ஆபிரிக்கக் கிளையினருக்காக நடாத்தப்பட்ட விருந்துபசார நிகழச்சிகளிலும் கலந்து கொண்டு விட்டு மீண்டும் கடலோரப் பாதையாக கிளிநொச்சி சென்றோம். உ.த.ப இன் இலங்கைக் கிளையின் மற்றொரு கிளையாக கொழும்பிலும் புதிதாக ஒரு கிளை தொடங்கப்பட்டு அவ்வைபவத்திலும் பங்கு கொண்டு சிறப்பித்தோம். அதன் தலைவராக டாக்டர் மு. கதிர்மாமநாதன் தெரிவு செய்யப்பட்டார். மேலும் செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற இலங்கை அரசின் இந்து கலாச்சார அமைச்சரகம் நடத்திய உலக சேக்கிழார் மாநாட்டிலும் பங்கேற்றேன். தொடர்ந்து தமிழகப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் உள்ள வேலூர் ஆற்காட்டில் மகாலட்சுமி வித்யாலயத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினேன். பின்னர் புதுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று புதுவை அரசின் முன்னாள் சட்டத்துறை செயலர் திரு. Y.E. நாராயண சாமி மற்றும் இந்திய உ.த.ப இ.கிளைத்தலைவர் திரு. கோபுடோ கிருஸ்ணமூர்த்தி ஆகியோர்களுடன் தொடர்புப் பணிகளுக்கான நடவடிக்கைகளையும் புதுச்சேரிக்கிளையையும் தொடக்கி வைத்துச் சிறப்பித்தேன் உ.த.ப இன் 9 ஆவது உலக மாநாட்டின் தீர்மானத்தின் படி 10 ஆவது மாநாட்டை அந்தமானில் நடத்த அதன் தலைவர் திரு. கரிகால் வளவன் அழைப்பினை ஏகமனதாக அங்கீகரித்து 2006 ஆம் ஆண்டு நடத்துவதற்கான ஏற்பாடுகளை முறையாக செய்து வருகிறேன். இவ்விதமாக உலகம் முழுவதும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட அனைத்து மக்களிடையே தமிழ் மொழி வளர்ச்சியையும் தமிழ்ப் பண்பாட்டு கலை கலாச்சாரப் பாரம்பரியங்களையும் பாதுகாக்கவும் தமிழர்களிடையே ஒற்றுமையுணர்வு மேலோங்கவும் உ.த.ப.இ செயல்படும்.



# இலங்கைப் பிரதிநிதியின் சுவிஸ் பயணம்

உ.த.ப. இலங்கைக் கிளையைச் சேர்ந்த பிரமுகர் திரு.க.பொன்னம்பலம் *(J.P)* அவர்கள் தனிப்பட்ட அலுவல் தொடர்பாக சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சுவிஸ்லாந்து நாட்டுக்கு பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். அங்கே உ.த.ப. இயக்க உறுப்பினர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பலரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அங்கே உள்ள தமிழர்கள் தமிழ் மொழி தமிழினத்தின் வாழ்விலும் வளத்திலும் மிகவும் ஆர்வமாகச் செயற்பட்டு வருவதாக அவர் கூறினார். சென்ற மாதத்தில் அவர் தாயகம் வந்து சேர்ந்தார்.


# சோதிடம்

ஆயுள் நன்மை, கல்வி, தொழில், விவாகம், காதல் பிரச்சினை, நோய் வாழ்வில் அதிஷ்டங்கள் வெளிநாட்டுப் பயணம் போன்ற முக்கிய பலன்கள் ஆய்வு செய்து அஞ்சலில் அனுப்புவோம். (நியாயமான கட்டண அன்பளிப்பு உள்ளது) முதலில் தொடர்புகொண்டு பின்னர் குறிப்புப் பிரதிகளை அனுப்பி வைக்கவேண்டும். வெளிநாடுகளில் உள்ளோர். பலன்கள் மட்டும் அறிய 05 யு.எஸ் டொலர் அல்லது சமமான தொகை அனுப்ப வேண்டும்.

முகவரி:

Sothida Prof.A.Shanmugalingam
(Shan Master)
C/o.R.Sundaralingam)
C.C.T.M.School Lane,
Kokkuvil West,
Sri Lanka.

Kanada
K.Kandasamy
T.P: 514-3415471




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி மறையுமா ?

## திறைமொழி தேசர் - கனடா.

2100 ஆண்டிற்குப் பின் தமிழ்மொழி உலகில் நிலைக்குமா? இல்லை என்கிறது யூனெஸ்கோ. மேற்படி முக்கிய கேள்விக்கு உலகில் இன்று 163 நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் நெஞ்சைத் தொட்டு பதில் கூற வேண்டிய கட்டம் வந்து விட்டது.

பாரிஸில் நடைபெற்ற பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (யூனெஸ்கோ) ஓர் ஆய்வறிக்கையை எடுத்துரைத்தது. அதாவது அடுத்த நூற்றாண்டில் இந்தியாவில் இந்தி மொழியும், வங்க மொழியும் மட்டுமே நிலைத்து நிற்கும் என்று.

உலகில் இன்று எட்டரை கோடிக்கு மேல் தமிழர்கள் அனைத்து நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். இத்தொகையினரில் ஆறரை கோடிக்கு மேல் தமிழர்கள் இந்தியாவிலும், குறிப்பாக 6 கோடிக்கு மேல் தமிழ்நாட்டிலும் வாழ்கின்றனர்.

பேராசிரியர் மைக்கேல்கிராஸ் அவர்கள் ஒரு மொழியியல் ஆய்வாளர். இன்று உலகில் 6760 மொழிகள் பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்றும், அதில் 6500 மொழிகள் பேசும் மக்கள் உலக சனத்தொகையில் 4 வீதம் மட்டுமென்றும் குறிப்பிடுகிறார். அத்துடன் 2100க்குப் பின் உலகில் 300 மொழிகள் வரையில் தான் வாழும் மொழிகளாக இருக்கப் போகிறது என்பது தான் அவரது கணிப்பு

ஒரு மொழி வாழ்ந்து கொண்டிருப்பதற்கு நான்கு அடிப்படை காரணங்கள் தேவைப்படுகின்றன.

1. சிறுவர்கள் தொடர்ந்து படிக்கக்கூடிய கல்வி மொழியாக, தாய்மொழி அமைந்திருக்க வேண்டும்.
2. அரசினுடைய அழுத்தமான ஆதரவு அந்த மொழிக்கு என்றும் இருக்க வேண்டும்.
3. குடும்பம், சமயம், வணிகம், அறிவியல் முதலியவற்றில் பயன்படுத்தும் மொழியாக தாய்மொழி விளங்க வேண்டும்.
4. பிற மொழிக் கலப்பு இல்லாமல் அம்மொழி திகழ வேண்டும்.

இந்த நான்கு நிலைகளையும், தமிழ்மொழி தமிழ்த்தாய் நிலங்களான இந்தியாவில் உள்ள தமிழ்நாடு. இலங்கையில் வடகீழ் மாகாணங்கள் (தமிழீழம்) புதுவை உட்பட உலகில் வேறு எந்த நாட்டிலும் பெற்றிருக்கவில்லை.

அகவே தமிழ்மொழி தனது இறுதி காலத்தை நோக்கி நடைபோடுகிறது என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

இந்நிலையிலிருந்து, தமிழ்மொழியை காப்பாற்றி தொடர்ந்து உலகில் வாழும் மொழியாக இடம்பெற உலகில் செறிந்து வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக தமிழ்நாடு, தமிழீழம், புதுவை உட்பட புலம் பெயர்ந்து வாழும் தமிழர் காலம் தாழ்த்தாது எடுக்க வேண்டிய பணிகள் சிலவற்றை முனைவர் மலையமான் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நினைவு படுத்த விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தமிழ்த்தாய் நிலங்களில் தமிழுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.
2. கல்வி நிலையங்களில் தமிழே பயிற்சி மொழியாக அமைய வேண்டும்.
3. தமிழ் ஆட்சி மொழியாக முழுமை நிலையில் மேற்கொள்ளல் பட வேண்டும்.
4. திருமணம், நீத்தார் நினைவு நாள், இறை வழிபாடு, நீதித்துறை, முதலிய அனைத்திலும் தமிழ் மொழியிலேயே இடம் பெற வேண்டும்.
5. அறிவியல் துறை என்ற புதுப் பிரிவு உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும்.
6. வங்கி, வணிகம், போக்குவரத்துத் துறை முதலிய எல்லா துறைகளிலும் தமிழ் மொழி பயன்படுத்த வேண்டும்.
7. தொலைக்காட்சி, இணையம், வானொலி, திரைப்படத்துறை, பத்திரிகைகள் முதலிய அனைத்து ஊடகங்களிலும் தூய தமிழ் பாவிக்கப்பட வேண்டும்.
8. முடிந்தமட்டில் பிற மொழி கலப்பு இல்லாத முறையில் தாய்மொழியை பேசவும் எழுதவும் வேண்டும்.
9. தமிழர் அனைவரும் தாய்மொழிப்பற்று ஏற்படும்படியான முறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தமிழர் தமிழ் பெயரே சூட்டிக்கொள்ள வேண்டும்.
10. புலம் பெயர்ந்த தமிழர் நலனில் தமிழ்த்தாய் நிலங்கள், குறிப்பாக தமிழ்நாடு மற்றும் புதுவை நாட்டம் கொள்ளல் வேண்டும். அவர்களின் தமிழ்மொழி வளர்ச்சியும் கலை பண்பாடும் பேணி வளர்கத் தொடர்புகளை ஏற்படுத்தி உதவ வேண்டும்.
11. இணையத்தின் மூலம் தமிழின் நிலைப்பாட்டிற்கும், கல்வி பெறுதலுக்கும், தகவல் பெறுவதற்கும் ஆவன செய்யப்பட வேண்டும்.
12. நல்ல தமிழில் கலைச் சொல்லாக்கம் வளர்க்கப்பட வேண்டும், இதற்கென தமிழ்நாடு அரசாங்கம் ஒரு சிறப்புக குழுவை உருவாக்கி அக்குழுவில் இலங்கை, புதுவை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்கள் இடம் பெறச் செய்ய வேண்டும்.
13. உயர் தனிச்செம்மொழி என்ற நிலையை பயன்படுத்தி உலக அரங்கில் தமிழ்மொழி மேலும் பல்வேறு பிறபண்புகளை பெறும்படி செய்ய வேண்டும். பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கை (CHAIR FOR TAMIL LANGUAGE) கலைக்களஞ்சியங்களில் சிறப்புக் கட்டுரை, தமிழ் பெரும் நூல்களை பிற மொழிகளில் பெயர்ப்புச் செய்ய வேண்டும்.
14. உலகிலுள்ள தமிழ் அமைப்புக்களின் ஒழுங்கிணைப்பிற்கும், அவற்றின் வளர்ச்சிக்கும், தொண்டிற்கும் தமிழ்த்தாய் நிலங்கள் குறிப்பாக தமிழ்நாடு உதவ வேண்டும்.
15. உலகத் தமிழ் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் வங்கி ஆகியவை உருவாக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டவை யாவும், தமிழ்த்தாய். நிலங்களுக்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்கு பொருத்தமானவையாக முனைவர் மலையமான் மாணவமன்ற நித்திலக்குவியல் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழமொழியை வருங்காலச் சமுதாயம் மறவாமல் இருப்பதற்கு பின் காணும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. வீட்டு மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
2. கனடா போன்ற பல கலாச்சார நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகள் வழங்கும் சலுகைகளை திறம்பட பயன்படுத்தி சிறார்களுக்கு தமிழ் கல்வி புகட்டப்பட வேண்டும். கனடாவில் தமிழ் பிள்ளைகள் ஆங்கிலத்தை முதன் மொழியாகவும், தமிழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மொழியாகவும் கற்ற வேண்டும். இதில் தமிழ் பெற்றோர்கள் கூடியவரையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

3. நடன வகுப்புகள் தமிழில் நடத்தப்பட வேண்டும். தமிழிசை முறையாக தமிழில் கற்பிக்கப்படல் வேண்டும்.
4. எமது இந்து சைவ ஆலயங்களில் உமது தெய்வங்களை தமிழில் ஆராதனை செய்தல் வேண்டும். எமது சிவாச்சாரியார்கள் பூரண ஒத்துழைப்பை நல்கிட வேண்டும்.
5. எமது மதச் சடங்குகள் யாவும் தமிழில் நடைபெற வேண்டும். இதில் நமது சிவாச்சார்யார்கள் முன்னின்று செயல்படுத்த வேண்டும்.
6. தமிழ் மக்கள் தங்களுக்கிடையில் தமிழில் உரையாடல் வேண்டும். பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயரினை சூட்டிடல் வேண்டும்.
7. தமிழ் வர்த்தகர்கள், தமிழர்களால் நடத்தப்படும் ஸ்தாபனங்கள் தங்கள் பெயர் பலகைகளை தூய தமிழிலும். ஆங்கிலத்திலும். தேவைப்படுமிடங்களில் பிரஞ்சிலும் எழுதப்படல் வேண்டும்.
8. ஒவ்வொரு தமிழ் வீட்டிலும் ஒரு திருக்குறள் புத்தகம் அவசியம் இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு கிழமைக்கு ஒரு திருக்குறளை விளக்கி, அவர்கள் மனனம் செய்வதற்கு பயிற்றுவிக்க வேண்டும்.
9. பெற்றோரையும், முதியோரையும் மதித்து நடக்க வேண்டுமென்பதை பிள்ளைகளுக்கு சிறு பிராயத்திலிருந்தே பயிற்றுவிக்க வேண்டும்.

மேற்கூறியவற்றை, தமிழ்தாய் நிலங்களில் வாழும் தமிழர்களும், குறிப்பாக தமிழ் நாட்டு மக்களும் கடைப்பிடிப்பார்களேயானால் யூனெஸ்கோ அறிக்கையை அர்த்தமற்றதாக செய்திட முடியும்.

தமிழ் மக்களுக்கிடையில் நாம் தமிழர் என்ற உணர்வு ஓங்க வேண்டும் தமிழர்கள் உலகில் மதிக்கப்படும் இனமாக அமைய வேண்டும். எமது தாய்மொழியாம் தமிழ் மொழியை மகா கவி பாரதியார் கூறிய தேமதுர தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்கல் வேண்டும் என்பதற்கேற்ப அவரது கனவை நனவாக்குவோம்.

**வாருங்கள் வீறு நடை போடுவோம்**

# திருக்கோயில்கள்

**எ**னக்கு உவப்பான அர்ச்சனை தமிழ்ப் பாட்டே என்று சிவபெருமான் சுந்தரரிடம் சொன்னதாகச் சேக்கிழார் கூறுவார். ஆனால் அந்தத் தமிழை "நீஷ பாஷை" என்று சைவத் திருமடத்தலைவர்களே கூறுகிறார்கள். தமிழ் மக்கள் வழிபாடு வடமொழி மந்திரம் சொல்லும் இடைத்தரகர்கள் வாயிலாகத்தான் நடைபெற்று வருகிறது.

(முனைவர் இரா.திருமுருகன் புதுவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தமான் தமிழனின் சிக்கல் நிறைந்த வாழ்வும் தமிழால் ஏற்படும் வாழ்வும் தாழ்வும்.

சுப. கரிகால் வளவன் M.A
(அந்தமான், இந்தியா)

உலகில் நூற்றுக்கு அதிகமான நாடுகளில் தமிழன் வாழ்ந்து வருகிறான். அவ்வாறு பாரெல்லாம் பரந்து வாழும் தமிழன் ஆங்காங்கே. இவ்வாறு முத்திரைகளைப் பதித்து தமக்கென உள்ள தனிக் குணத்தை உலகுக்கே எடுத்துக் காட்டி விளங்கும் வண்ணம் வாழ்ந்து உலகுக்கே வழிகாட்டியாக இருந்து வருகிறான். அவனுக்கே உள்ள தனிக் குணம் போராட்டக் குணமாகும்.

ஈழத்தமிழர் போராடவில்லை எனில் தமிழன் புறநாற்று வீரவரலாறு பொய்யாகி இருக்கும். தமிழனின் புகழையும் பெயரையும் உலகுக்கு அறிமுகப்படுத்தியது ஈழத்துத் தமிழனே என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அந்தமான தீவில் தமிழ்க் கல்வி தொடங்க தமிழர்கள் பட்ட இன்னல்கள் நடத்திய போராட்டங்கள் எண்ணிலடங்கா. ஆனால் பெற்றதைக் கட்டிக் காக்க நாம் செய்யும் முயற்சிகள் தான் என்ன? எங்கே அந்த உணர்வுகள் தமிழனுக்குத் தமிழுணர்வு இல்லாமல் குறுகிய எண்ணங்கள் ஏற்பட்டதற்கு என்ன காரணம்.

வாழும் தமிழன் வீழும் போது உதவி வருவதற்கு எவனும் தயாரில்லை. அப்போது தமிழனுக்கு உணர்வு மேலோங்குகிறது. தமிழனுக்குத் துணைபுரிய முன் வருகிறான் தீவில் ஏறத்தாழ 10 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பெயர் பதிவு செய்து பணிக்காகத் தவங்கிடங்கின்றனர். ஆனால் அவர்களுக்கு அரசுப் பணிகள் கிடைக்கப் போவதில்லை. என்பது உண்மை.

ஏனெனில் அந்தமான் தீவை இந்திய அரசு மானிலமாக மைய அரசு அறிவித்துள்ளது. இதனைத் தீவின் தமிழினத் தலைவர்கள் உணரவில்லை. உணர்ந்தும் போராட முன்வரவில்லை. எனவே இன்று வேலைவாய்ப்புகளில் இந்தி மொழிக் கல்வி பயின்றவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு முதல் தமிழக அரசு தீவின் தமிழ் வம்சாவழி மாணவர்களுக்கு ஒதுக்கி வந்த மேற்படிப்பு இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்துள்ளது எனவே மேற்படிப்புக் கல்வி பயில தமிழர்கள் படும்பாடு வர்ணிக்க முடியாத ஒன்று.

மற்ற மொழி மக்களுக்கு ஒதுக்கப்பட்டு வரும் மேற்படிப்பு இட ஒதுக்கீடு தமிழர்களுக்கு மட்டும் இப்போது இல்லை கட்டிட மரக்கை வினைத் தொழிலாக இருக்கட்டும் அல்லது காய்கறி பழ வியாபாரமாக இருக்கட்டும், மளிகை பைனான்ஸ் என அனைத்துத் தொழில்களிலும் தமிழர்களுக்கெதிரான சதித் திட்டம் நடைபெறுகிறது.

அதிகார வர்க்கத்தில் சில குறிப்பிட்டோரின் ஆதிக்கம் இருப்பதால் அவர்கள் தமிழர்களை ரசத்துக்கு கறிவேப்பிலையாக நினைக்கிறார்கள். அன்றாட வயிற்றுப் பிழைப்புக்காகப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு காலமாகப் பெட்டிக் கடைகள் நடத்தி வருவோரது பெட்டிக் கடைகள் உடைக்கின்றனர். ஆனால் புதிய பழக் கடைக்காரர்களுக்கு நகராட்சிக் கடைகள் ஒதுக்குகின்றனர். தமிழர்களின் ஆங்கிரமிப்புக் குடிசைகளாகப் பார்த்து அகற்றி வருகின்றனர். 1978க்குப் பிறகு வந்தவர்களுக்கு சலுகைகள் அளிக்காதபடி அடையாள அட்டை வழங்கும் முறையைக் கொண்டு வந்து தமிழர்களுக்கு சலுகைகள் ஏதும் கிடைக்காதபடி சதித்திட்டம் தீட்டி வருகின்றனர். சில அரசியல் பின்னணி கொண்ட அரசு அதிகாரிகளால் கட்டிட கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமிழர்கள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் சில அரசியல் காரணங்களுக்காக மணலைக் கடலிலிருந்து எடுப்பதற்கும் குவாரிக் கற்களை எடுப்பதற்கும் மைய அரசு தடைவிதித்துள்ளது. சுற்றுச் சூழல் பாதுகாப்புக் கருதியும் தீவின் நில நடுக்கச் சூழலைக் கருத்தில் கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறுகிறது.ஆனால் அதே நேரத்தில் வேறு மானிலங்களிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் அதிக விலையில் கட்டுமானப் பொருட்களை எடுத்துவரப்படுகிறது.

தமிழர்கள் குறிப்பாக நல்ல தொழில் துறையினர் சுற்றுலா சம்பந்தப்பட்ட தொழில்களை தீவில் தொடங்கலாம் (நட்சத்திர விடுதி, உணவு விடுதி, அதிவேகப்படகுப் போக்கு வரத்து நடமாடும் வாகன விடுதி எனப்பல புதிய திட்டங்களைத் தீட்டி தீவில் நடைமுறைப்படுத்தலாம். தீவின் நாலாபுறமும் கடல் சூழ்ந்துள்ளதால் பல கடல் உயிரினங்கள் மீன்கள் உற்பத்திக்கு நல்ல வாய்ப்புகள் இருந்தும் ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வாய்புகள் இருந்தும் அதனை நடைமுறைப்படுத்த நிர்வாகம் முயற்சிக்கவில்லை எனவே அண்டை நாட்டு உள்ளூடுருவல் காரர்கள் தீவின் கடல் வளத்தை கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

ஓலைகள் மூங்கில்கள் போன்றவற்றின் மூலம் பல அரிய பொருட்களைச் செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளது வனப்பகுதிகளில் விளைச்சல் நிலங்களில் பழவகைகள் பயிரிடலாம். தீவில் ஏராளமான மூலிகைகள் கிடைத்து வருகின்றன. அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளலாம். தமிழ் மருத்துவத்தைத் தீவில் பெரிய அளவில் தொடங்கலாம்.

தீவில் கனிம எண்ணைகள் தங்க பிளாட்டினம், நிலக்கரி சுரங்கங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் முறையான ஆய்வுகள் நடத்தப்படுவதில்லை. தீவின் வனப்பகுதிகளில் பல விலையுயர்ந்த மரங்களும். அரிய மரங்களும் சந்தன மரங்களும் இருக்கின்றன. இவற்றின் பயன்பாடு முறையாக இல்லை.

இந்நிலையில் தமிழர்கள் தமிழர் சார்ந்த அழைப்புகள் இணைந்து அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு மாநில அந்தஸ்து வழங்க மைய அரசை வலியுறுத்த வேண்டும் புதுச்சேரியைப் போன்று இங்கும் சட்டமன்றமும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட்டால் மட்டுமே அதிகாரவர்க்கத்தின் ஆணவப் போக்கைக் கட்டுப்படுத்த முடியும். மைய அரசு ஒதுக்கும் வளர்ச்சி நிதிகள் முறையாகப் பயன்படும் மக்களவைக்கு ஒரு வங்க இனத்தவர் தேர்ந்தெடுக்கப்படுவது போல மானிலங்களவைக்கு ஒரு தமிழினத்தவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அந்தமான் தமிழர்களின் குரல் நாடாளுமன்றத்தில் கேட்கும் நிலை உருவாகும்.

தமிழை உயர்த்துவோம்.
தமிழால் உயர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களுக்குள் தேவை ஒற்றுமை

தமிழ்ச் செம்மல் செ. பரமநாதன்
தாவடி, இலங்கை

"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"

என்று சொன்ன கவிஞனின் சீரிய வாக்கினிலே அனைத்தும் அடங்கியுள்ளது. அன்பு ஒற்றுமை வீரம், பண்பாடு ஆகிய அனைத்திலும் தமிழன் சிறந்து விளங்க வேண்டும். என்பது தான் இந்த சிரஞ்சீவிக் கவிஞனின் பாடல்கள். இந்த ஒற்றுமை எண்ணம் நமது தமிழ் மக்களின் மனதிலும் செயல்களிலும் ஒளி விடவேண்டும்.

தமிழர்கள் வீரத்திற்கும், அன்பிற்கும். பொறுமைக்கும் பெயர் போனவர்கள். இவை சங்க கால இலக்கியங்களிலிருந்து இன்று வரை மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. தமிழ் என்று சொல்லும் போதே நாவினிக்கின்றது. தமிழையே உண்டு வளரும் தமிழனுக்கு இனப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று ஆகியவை இயற்கையிலேயே ஊட்டப்படுகின்றது. உலகிலேயே பண்பாட்டிற்கும் பெயர்பெற்றது தமிழகமும் தமிழீழமுமாகும். இந்த நினைவுமட்டும் நெஞ்சிலே நிலைத்திருக்குமானால் நாம் வலிமை மிக்கவர்களாவோம். என்பது உறுதி. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இந்த நினைவு இருக்க வேண்டும். தனி மனிதன் குடும்பமாகி குடும்பங்கள் கிராமமாகி கிராமங்கள் நகரமாகி நகரங்கள் நாடாகின்றன. அவ்வாறு உருவாகும். நாடு ஒற்றுமையின் காரணமாக அனைத்துப் பெருமைகளையும் பேறுகளையும் பெற்ற நாடாக விளங்கும்.

ஒற்றுமை நல்ல பண்புகளை வளர்ப்பதற்காக நமது முன்னோர் குழந்தைப் பருவம் முதற் கொண்டே கதைகள் மூலம் நல்ல நெறிகளை அறிவுறுத்தி வந்துள்ளனர். அந்தக் கதைகளில் ஒற்றுமையும் ஒழுக்கமும் பிரதான இடம் பெற்றிருக்கும். உலகிலே எந்த 5லையில் இருந்தாலும் தமிழனின் அன்பு பாசம் ஒழுக்கம் பண்பு போன்ற உணர்வுகள் அடிப்படையில் மாறுவதில்லை. அவனுக்கு என்றொரு தனிப் பெருமையை பெற்றுத் தருகின்றன.

நமது நலிவுக்குக் காரணம் ஒற்றுமை இன்மை தான் இக்காலக் கட்டத்தில் தமிழர்களிடையே ஒற்றுமை தேவை சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி சொல்லல் பாவம் என்பதை நமது தமிழ் மக்கள் உணரவேண்டும். சாதிக் கலவரங்கள், இனக்கலவரங்கள் ஆகியவை பூண்டோடு அழிய வேண்டும். ஒற்றுமை குறைவதினால் மாற்றாரின் ஊடுருவல் நம்மை அறியாமலே அனுமதிக்க நேரிடுகின்றது. ஒற்றுமை உண்டாகும் போது அதில் வலியவன் எளியவன் என்ற பாகுபாடு தோன்றுவதில்லை. நமது சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிறுகதைகள் என்று அனைத்திலும் நாம் அனைவரும் சமம் ஒன்றே குலம் ஒருவனே தேவன். ஒருவநே தேவன் என்ற ஒற்றுமையில் நலன்களும் ஒற்றுமையின்மையில் கேடுகளும் தெட்டத் தெளிவாக விளங்கப்பட்டிருக்கின்றன.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு"

என்றார் பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேடறியக் கெட்டவிடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை"

என்கின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவனார்

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்றே சங்கே முழங்கு"

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாட்டுக்கேற்ப நமது தாய் தமிழ்த் தாயாகவும் நமது மொழி தமிழ் மொழியாகவும் கொண்டு நாமெல்லோரும் தமிழர்கள் என்ற உணர்வுகள் மனோபாவம் ஒங்க வேண்டும். நம்மை நாமே அழித்துக் கொள்ளும் கொடுமைகள் அழிய வேண்டும். ஒற்றுமை எங்கும் நிலை பெற வேண்டும்.

சங்ககாலத் தமிழர்கள் தமிழில் அனைத்தும் படைத்துக் காட்டினர் மருத்துவம் நீரியல் பொறியியல் கட்டிடக்கலை, சிற்பக்கலை, கப்பல்துறை கனிமத்துறை, ஆடற்கலை அலங்காரக்கலை இன்ன பிறகலைகளில் அவனியில் தலையானவர்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர்.

எகிப்து நாட்டுப் பேரழகி கிளியோ பாத்திராவின் வெண்சங்குக் கழுத்தைப் பாண்டிய நாட்டு முத்துக்கள் அலங்கரித்தன. என்று வரலாறு கூறுகின்றது.

ரோம் நாட்டு மன்னன் தமிழகத்து மிளகையும் வாசனைத் திரவியங்களையும் விரும்பிக் கொள்முதல் செய்தான், நற்றமிழர் நாவாய் மூலம் நாநிலம் முழுவதும் வாணிபம் செய்துள்ளனர்.

ஜப்பான் மொழியில் தமிழ்ச் சொற்கள் பலகலந்திருந்த போதிலும் அரிசா என்ற சொல் எமது தமிழ் மொழியில் உள்ள அரசியின் மாற்றுச் சொல்லாகும். என ஆய்வாளர் கூறுகின்றனர்.

பல்வேறு ஆண்டுகளுக்கு முன் தமிழகமும், இலங்கையும் ஒன்று சேர்ந்து இருந்தன. அது சிறு கடலினால் பிரிந்திருந்தது என்று மெகஸ்தீனீஸ் என்ற மேலை நாட்டுயாத்திரிகர் தென்னாட்டைச் சுற்றி வந்து கண்டு களித்து அவர் எழுதிய சான்று ஆதாரங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

மெகஸ்தீனிஸ் காலத்தில் தென்னாடும் இலங்கையும் ஒன்றுபட்டிருந்தன எனக் கொள்ளுதல் பிழையாகாது. ஒரு காலத்தில் தாமிரபரணி ஆறு இலங்கை வரை சென்றதென கருதப்படுகின்றது. எல்லம் என்பது இலங்கையின் பழைய பெயராகும். எல்லம் என்பது ஈழம் என்றாயிற்று. ளகரம், ழகரமாக உச்சரிக்கப்பட்டுள்ளது. மொழி ஆய்வாளர்களின் கருத்துப்படி இதை மெய்ப்பிக்கின்றது.

ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் தமிழே முழங்கிற்று என்று தமிழறிஞர். ந.சி. கந்தையாப்பிள்ளை தனது தமிழ் இந்தியா என்ற நூலில் தமிழின் பெருமை குறித்து சுட்டிக்காட்டியுள்ளார்.

இடைக்காலத்தில் தென்னாட்டில் புகுந்த ஆரியவம்சத்தினர் அந்நாளைய சிற்றரசர்களின் பலவீனத்தையும், ஒற்றுமையின்மை என்பனவற்றையும் நன்கு அறிந்து தங்களின் மொழி, நடை உடை பாவனை கலாச்சாரம் அனைத்தும் நாட்டில் பரவ வழிவகுத்தனர். இங்ஙனமான அவர்களுடைய செய்கைகளினால் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் தமிழில் மணிப்பிரவாளம் இரண்டறக் கலந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938ம் ஆண்டு மறைமலை அடிகள் தலைமையில் தனித் தமிழ் இயக்கம் ஆரம்பித்தது. இதில் பலதமிழ் அறிஞர்கள் சேர்ந்து செயற்பட்டனர். இந்தக் காலக் கட்டத்தில் மீண்டும். தமிழ் நூல்களின் பெருமையும், திருக்குறளின் மாண்பும் தமிழக மக்களுக்கு உணர்த்தப்பட்டது. தமிழ் இயக்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக தமிழகமெங்கும் ஒளி விட்டுப் பரவியது.

திராவிட இயக்கங்கள் தோன்றிய காலத்தில் திராவிட முன்னேற்றக் கழத்தின் தலைவர் அறிஞர் சி.என். அண்ணாத்துரை தலைமையில் தமிழ் மாணவர்கள் தூய தமிழில் பெயர் சூட்டிக் கொள்ள முன்வந்தனர். நெடுஞ்செழியன், செழியன், அன்பழகன், அறிவழகன், இளங்கோ, சிற்ரரசு, மதியழகன், மாறன் போன்றவர்கள் தமது பெயரை தனித் தமிழில் மாற்றிக் கொண்டனர். இவர்களோடு இருநூற்றுக்கும் அதிகமானவர்கள் ஒரே நாளில் தமது பெயரைத் தனித்தமிழில் மாற்றிக் கொண்டனர். இல்லம் தோறும் இனிய தமிழ் மணக்கத்துவங்கியது நல்ல தமிழில் பேசுவதும் எழுதுவதும் மக்களால் வரவேற்கப்பட்டன.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் கலைஞர் கருணாநிதி போன்ற தமிழ் அறிஞர்களின் அடுக்கு மொழியாம் அலங்காரத் தமிழாம் என எதுகை மோனை சேர்ந்த தமிழ்ப் பேச்சை தமிழகம், ஈழம் என்பன வரவேற்றது ஒரு காலம் அதுவே தமிழர்களின் பொற்காலமாகும்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயிது காதினிலே" என்ற பாரதியின் வேதமும் அடிமைத் தமிழர்களின் செவிகளிலே ஈயத்தை காய்ச்சி ஊற்றுவது போல் உள்ளது.

"உரம் பெய்த செந்தமிழிற்கு ஒன்றிங்கு
நேர்ந்ததென உரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாகி நனவெல்லாம்.
உணர்வாகி நண்ணிடீரோ"

"என்ற புரட்சிக்கவிஞரின் வீரவரிகள் அடிமைத் தமிழரினால் மிதிக்கப்படுகின்றது.

சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் உனதாலின் முதுமொழி நீ அநாதியென மொழிவதும் வியப்பாமே" என்ற வி.கல்யாணசுந்தரனாரின் தமிழ் மந்திரம் தமிழ் நாட்டில் பகைவர்களினால் தூக்கி யெறியப்பட்டது. இந்த நிலை தமிழகத்தில் நீடிக்குமானால் தமிழகத்தின் எதிர் காலம் என்ன? பண்பாட்டின் நிலை என்ன?

உலகிலே தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஒற்றுமையுடனும், சகோதர உணர்வுடனும் பழகி எமது மொழி, பண்பாடு என்பனவற்றைப் பேணிப் பாதுகாத்து வருதல் வேண்டும். இனி ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் செயல் படுத்துவோம் என்று சூழுரைப்போம் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஓங்கி வளர வேண்டும் இது தான் அதற்குச் சரியான மாமருந்து. வாழ்க தமிழ் வளர்க எமது பண்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா கீதவாணி வானொலிச் சேவைப் பொறுப்பாளரும் உ.த.ப இன் தலைமையக ஊடக தொடர்பாளருமாகிய திரு. நடா ராஜ்குமார் இலங்கை வந்த போது திரு.சண்முகலிங்கம், செ.பரமநாதன் ஆகியோருடன் காணப்படுகிறார்



உ.த.ப இன் இலங்கை செயலாளருக்கு அகிலத் தலைவர் திரு. சி.செல்லையா அவர்களும் துணைத் தலைவர் திரு.கிறிஸ் கிஸ்ரனும் சின்னம் சூட்டுகின்றனர்



புதுவையில் உ.த.ப. இயக்க கிளைக் கூட்டத்தில் பங்கு பற்றியோரில் ஒரு பகுதியினரை படத்தில் கானலாம்



புதுவைக்கிளைப் பொறுப்பாளர் சட்ட வல்லுனர் திரு. நாராயனசாமி அவர்களுக்கு உ.த.ப இன் துணைத் தலைவர் திரு. கிறிஸ் கிஸ்ரன் அவர்கள் உ.த.ப இயக்கச்சின்னம் சூட்டுகிறார். அருகில் இந்தியக்கிளை தலைவர்கோபுடோ கிருஸ்ணமூர்த்தி காணப்படுகிறார்.



தென்னாபிரிக்க தமிழர்களுக்கான வரவேற்பு நிகழ்வில் உ.த.ப இன் பொதுச் செயலாளர் திரு.ஆ.சண்முகலிங்கம் தலைமை தாங்குவதையும் உ.த.ப இன் இலங்கைப் பிரமுகர் திரு. சி.வ.ஆறுமுகசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றுவதையும் காணலாம்.



அகிலப்பொதுச்செயலாளர் திரு.ஆ.சண்முகலிங்கம் அவர்களுக்கு துணைத் தலைவர் திரு. கிறிஸ் கிஸ்ரன் அவர்கள் சின்னம் சூட்டுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவில் சூனாமியால் அழிந்த கட்டடங்களில் சில



ஆர்க்காடு ஸ்ரீ மகாலட்சுமி பெண்கள் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையை உ.த.ப இன் அகிலத்தலைவர் செல்லையா அவர்கள் திறந்து வைக்கிறார்.



புதுவைக்கிளைக் கூட்டத்தில் அகிலத் தலைவர் அவர்கள் பேசும் போது.




திருவள்ளுவர் சிலையும் தறந்து வைத்த உறுதிசெய்யும் கற்பலகையையும் கானலாம்



புதுவைக்கிளையின் முக்கிய பொறுப்பாளர்களும் ஆர்வலர்களும் அகிலத் தலைவர் திரு சி. செல்லையா அவர்களுடன் சேர்ந்து காணப்படுகின்றார்.



புதுவைக்கிளைக் கூட்டத்தில் அகிலத் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் தமிழும்



திரு. ஆ.செல்லத்துரை J.P
திருநெல்வேலி – யாழ்ப்பாணம்

சைவத்துக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு மிகத் தொன்மையானது பிரிக்க முடியாது. என்றால் மிகையாகாது. குமரிக் கண்டம் அதாவது லெமுரியாவில் இரண்டும் வாழ்ந்தது என்பதற்கு பல சான்றுகள் உண்டு. குமரியில் உச்ச நிலையிலிருந்து பின் மொகஞ்சதாரோ கரப்பாவில் மிளிர்ந்தது மட்டுமல்ல கரீட்டன், கிரேக்க, உரோம நாகரீக சிதைவுகளில் இன்றும் சிவலிங்கம் காணப்படுவதாக திரு.ந.சி.கந்தையா அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். இவை அனைத்தும் தேவபாடை அல்லது வடமொழி என்னும் ஆரிய மொழி உருப்பெறுவதற்கு. முந்திய காலம் ஆசிய ஐரோப்பிய புல் வெளிகளிலிருந்து இடையர்களாக மந்தைகளுடன் ஆரியர்கள் வடஇந்தியாவிற்கு புகுவதற்கு முந்திய காலம் மந்தை மிருகங்களை சிறு தெய்வங்களுக்கு பலியிட்டு, சோமப் பூண்டின் வடிசாயத்தைக் குடித்து மதி மங்கிய நிலையில் இருக்கும் வேதம் முதலான் பாடல்களைப் பாடித்திரிந்த காலத்துக்கு முந்தியது இவை எல்லாம் கட்டுக்கதையல்ல ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து அறிந்து எடுத்தியம்பிய உண்மைகள் இன்றும் தேவபாடை எனப் போற்றப்படும் வடமொழிக்கு வரிவடிவம் கிடையாது என்று பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்தரையர் எடுத்துக் கூறுகிறார். வடக்கே நாகரியிலும் தெற்கே கிரந்தத்திலுமே எழுதப்படுகிறது. இன்று தெய்வ மொழிக்கு வாதிடும் ஓர் இனத்தினர் அன்று எப்படி சைவம் வாழ்ந்தது என்பதையிட்டு சிந்தித்தார்களா?

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற உலக சைவப் பேரவையில் நான்காவது மாநாட்டில் மலேசியப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வாளர் கலாநிதி லோகநாதன். அவர்கள் சுமேரிய நாகரீக அடியிலிருந்து முதற் சங்க பாடல்களை கிட்டத்தட்ட கி.மு. நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவைகளை எடுத்தியம்பிய போது எமக்கே மயிர்க் கூச்செறிந்தது. சங்க வரலாறு கட்டுக்கதை என்று கூறியவர்கள் தலை குனிய வேண்டியிருந்தது. அன்றே வரிவடிவம் பெற்று வாழ்ந்த மொழி எமது தமிழ் நாம் உண்மையில் பெருமைப் பட வேண்டிய ஓர் உண்மை.

இந்தத் தமிழுக்கு இறைவன் முன் இடமில்லையா? நாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய செய்தி கடவுள் என்ற தமிழ்ச் சொல்லுக்கு இலக்கணம் கூறுவதனால் எல்லாவற்றையும் கடந்தவர். எங்கும் நிறைந்தவர் என்று சகல வரம்புகளையும் கடந்த ஒரு நிலை தெரியும். இவ்வாறு இறைவனின் சகல இலக்கணங்களையும் தன்னகத்தே அடக்கிய ஒரு சொல்லை உடைய மொழி தமிழ் என்றால் மிகையாகாது. ஆனால் இன்று வாழும் வடமொழி ஆர்வலர்களின் கூற்றைப்பார்த்தால், எல்லாம் அறிந்த கடவுளுக்கு தமிழ் மட்டும் தெரியாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியுள்ளது. வேடிக்கைதான் அந்தக் கடவுளுக்கு கூலிக்கு ஆள் அத்துவக்காத்து வைத்து. சொல்பவருக்கும் சொல்லிவிப்பவர்க்கும் புரியாத மொழியில் சொன்னால் தான் புரியுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சைவத்தை ஏனையோர் எள்ளி நகையாடுவதுக்கு அடிப்படை இதுதான். இந்த தேவ மொழி பேச்சு வழக்கற்றுப் போனதற்கு என்ன காரணம் இறைவனுக்கு மட்டும் தெரிந்து இருக்க வேண்டும். என்பதற்காகவா? அல்லது கூலிப் பிழைப்பு அற்றுப் போகும் எனபதற்காகவா? சூத்திரன் வாயில் புகுந்தால் அவனது நாக்கை வெட்டி வாழ்ந்தமிடுக்கிலா அந்தப் பாவச்சுமை தாங்காமலா தமிழர்களே சிந்தித்துப் பாருங்கள் ஆட்டு மந்தையாக பின் செல்லாது உனது வரலாற்றை நாகரீக முதிர்ச்சியை பண்பாட்டைப் பற்றி சிந்திக்கவும்.

இன்று வாழும் பல மொழிகளை சீர்தூக்கிப் பார்த்த மேலை நாட்டு ஆய்வாளர்கள் முடிவு யாதெனில் பிரஞ்சு மொழி, காதல் மொழி, ஜேர்மன் மொழி, இலக்கியமொழி ஆங்கிலம், வர்த்தகமொழி இந்த வரிசையில் எமது தமிழை வழிபாட்டு பக்தி மொழி என்று வைத்துள்ளனர், ஆனால் அந்தத்தமிழில் வழிபாடு செய்ய முடியாதாம். இநத தரகு வியாபாரத்தை எமது சமய வாழ்விலிருந்து உடைத்து எறியும் காலம் வந்து விட்டது. இருபத்தோராம் நூற்றாண்டில் சைவம் வளர வேண்டுமானால் உலக சமயம் ஆக மிளிர வேண்டுமானால் "அன்பே சிவம்" என்ற பழக்கம் தமிழ்க் கொள்கையை தமிழ்மறையாம் திருமந்திரம் எடுத்துக் கூறும் உண்மை நிலையை ஏற்று தலைமேற்கொண்டு முன்னேற வேண்டும்.

## சைவம் உலகளாவிய வளர்ச்சியடையாதது ஏன் ?

இவ்வேளையில் சைவம் ஏன் உலக சமயமாக வளர்ச்சியுறவில்லை என்று சற்று சிந்திப்பது சாலவும் சிறந்தது. சோழப் பேரரசு காலத்தில் இந்திய துணைகண்டம் மட்டுமல்லாது தென்கிழக்காசியா முழுவதிலும் சிறப்புற விளங்கிய சைவம் பின் கூனிக் குறுகி முடங்கிக் கிடப்பது எதனால் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்புருவாய் சகலரையும் அணைத்து சமுதாய வாழ்க்கை நெறியாக மிளிர்ந்த சைவம் பிராமணத்துவம் என்னும் இரும்பு சட்டையில் மாட்டிக் கொண்டதுதான் உண்மையான காரணம் அன்பு வழிபாட்டை மறந்தது அடுத்த உண்மை சைவம் என்றும் உயிர்பலியை ஏற்கவில்லை. ஆனால் ஆரிய மயையில் அமிழ்ந்து சைவக்கோவில்களில் எல்லாம் பலியீடம் நிறுவப்பட்டது ஓம குண்டங்கள் அமைத்து, தீவளர்த்து தீயில் இடுபவை தான் இறைவனைச்சாரும். என்ற மூட நம்பிக்கையில் அமிழ்ந்தோம். இன்றும் மீண்ட பாடில்லை தாழ்ந்து கொண்டே போகிறோம்.

தாழ்ந்து போனவர்களை வலு சுலபமாக மனுதர்மத்தில் மாட்டிவிட்டார்கள். செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழ்ந்த தமிழினம் செய்யும் தொழில் சாதியின் அடிப்படையானது என்ற சேற்றில் வீழ்ந்து விட்டது. ஆரியர் என்று தன்மைப் பெயரிட்டவர்கள் எங்கள் தலையில் புளி தேய்க்கத் தொடங்கி விட்டார்கள் இது மனித நிலை வாய்ப்புக் கிடைத்தால் யாருக்குத்தான் உயர்ந்தவனாக விரும்பமில்லை. அரசனிலிருந்து ஆண்டிவரை தாழ்த்தப்பட்டார்கள். இறை வழிபாட்டு தூதுவர்களாக கூலிப்படையாக தம்மை ஆக்கிக் கொண்டார்கள் உடல் உழைப்பின்றி சொகுசு வாழ்க்கையை அடைய குறுக்கு வழி படைத்தனர். சூத்திரன் நாவை வெட்டும் அளவுக்கு அடக்கிக் கொண்டனர். நாம் இறைவனை கருவறையில் சிறைவைத்து உணவு கொடுக்க காவாலியை கூலியாளாக வைத்தோம். இறைவன் எம்மிடமிருந்து அகன்றார். என்றுதான் கொள்ள வேண்டும். முடிவு சைவம் தாழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ மொழியாம் வடமொழியை மிலேச்சக் கூட்டம் என்று எண்ணி நகையாடிய மேல் நாட்டினருக்கு கற்றுக் கொடுத்தார்கள். அதே மேலை நாட்டவன் சைவத்தில் இணைந்தால் அவனும் சூத்திரனோடுதான் கணிக்கப்படுவான் என்று சொல்லும். பார்ப்பனர் அவர்களுக்கு வடமொழி கற்றுக் கொடுத்தனர். இதிலிருந்து அவர்களின் போலித்தன்மை நன்கு விளங்குகிறது. ஆகவே இன்று சைவம் திரும்பவும் உலகளாவிய சமயமாக வேண்டுமானால் பிரமாணத்துவம் என்னும் இரும்புச் சட்டையை உடைத்தெறிந்து முச்சங்க காலத்திலும் பின் சைவமறுமலர்ச்சிக் காலம் எனப் போற்றப்படும். திருமறைகள் கண்டநாயன்மார் காலத்துக்கு போகவேண்டும். வழிபாட்டு மொழியாக தமிழ் மிளிர வேண்டும். இதற்கும் எதிர்ப்பா? யார் எதிர்ப்பவர்கள். சைவம் வளராது சைவத்தின் அல்லது இந்து சமயததின் உள்கிடைக்களான சிறு இயக்கங்கள் உலகளாவிய நிலையில் வளர்கின்றன என்றால் காரணம் யார்? ஒருகாலத்தில் சைவத் திருமுறைகளை பூட்டி வைத்தது போல் இன்று இறைவனைப் பூட்டி வைத்திருக்கின்றோம். இறைவனோடு பேசுவதற்கு கூலியாள் உண்டு. என யாருக்குமே புரியாத மொழியும் உண்டு அம்மொழி இறைவனுக்கு புரியுமா என்று கேட்கத் தோன்றுகிறது. இந்த வழியில் நற்சிந்தனையாளர் யார், எள்ளி நகையாடாது எமது சமயத்தில் இணைந்து கொள்வார்கள். இதன் பெறுபேறு சைவத்தின் அடிப்படையான அன்பை அடித்தளமாக கொண்ட இராம கிருஸ்ண பேரவை உலகளாவிய வகையில் வளர்ந்து கொண்டு போகின்றது. ஏன் கரே -கிருட்னா இயக்கம் வளர்கிறது இன்னும் பல பல நாம் எம்மை காற்றுப் புகா மட்டத்தில் பூட்டி வைத்தால் யாரும் எம்மை அண்டமுடியாது. அவர்கள் வேறு வேறு வழிகளில் குறுக்கு வழிகளில் போகிறார்கள்.

## ஓர் உண்மை

பிற சமயத்தவர்களிடமிருந்தாவது நாம் ஓர் உண்மையை கற்றுக் கொள்ள வேண்டும். இன்று உலகளாவிய சமயங்களாக மிளிரும் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் எம்மைப்போல் இரும்புப்பிடியிலிருந்தால் இன்றைய வளர்ச்சி நிலையை அடைந்திருக்க முடியுமா?, கிறிஸ்தவ மதத்தை போதிக்க வந்த மேலை நாட்டவர் அருட்தந்தை. பெஸ்கி (வீரமாமுனிவர்) அருட்தந்தை கால்டுவெல் அருட்தந்தை போப் ஏன் தமிழ் கற்றார்கள். தமிழின் மேலுள்ள அன்பினாலா? இல்லவே இல்லை. பின் தமிழ் மக்களை தம்பால் ஈர்ப்பதற்கு தமிழே சிறந்த ஆயுதம் என்பதை உணர்ந்து தான் தம் சமயப் போதனையை மக்கள் அறியும் மொழியால் செய்தால் தான் மக்களை மதமாற்றம் செய்ய முடியும் என்று உணர்ந்து செயற்பட்டார்கள். கிறிஸ்தவத்தின் ஆதி மொழியில் போதித்திருந்தால் அவர்கள் இன்றைய வளர்ச்சி நிலையை அடைந்தார்கள். இஸ்லாம் வாளொடு வந்தாலும் இன்று தோளோடு தோள் நின்று தமிழில் போதிக்கிறார்கள். வெள்ளிக்கிழமைகளில் யும்மா வழிபாட்டின் போது துள்ளு தமிழில் போதிப்பதை இன்று நாம் கேட்டு இன்புறலாம். பௌத்த பாளியுடன் இறுகப்பற்றியிருந்தால் இன்றைய நிலை அடைந்திருக்க முடியுமா? சிங்களம், சீனம், யப்பான் மற்றும் சகல தென்கிழக்காசிய மொழிகளிலும் மிளிர்கிறது.

ஆகவே எமது சைவமும், இறந்த வடமொழி பிடியிலிருந்து விடுபட்டு உலகளாவிய அடிப்படையில் வாழும் சகல மொழிகளிலும் வழி நடத்தப்படுமாயின் உலக சமயமாக அடுத்த நூற்றாண்டில் மிளிரும்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணைத் தொடுவோம்.

***"கவிஞர் - இளநாவலர் உதயகரன் துரைராஜா"***
***- கனடா -***

1999ஆம் ஆண்டு ஆடி மாதம், தமிழ்நாடு. அறக்கட்டளை மற்றும் வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து, அட்லாண்டிக் நகரில் நடாத்திய மாநாட்டில், "விண்ணைத் தொடுவோம்" என்ற கவியரங்கு, "கவிஞர் இங்குலாப்" தலைமையில் நடைபெற்றது. அதில சிறியேன் கலந்து கொண்டு, உவந்தளித்த கவிதையின் ஒரு பகுதி வருமாறு.

மெஞ்ஞானம் மூலம் தமிழர்
விஞ்ஞானம் கண்டவர்கள்!
விஞ்ஞானம் சொல்லுமுன்னர்
மெஞ்ஞானம் கண்டவர்கள்!

அகிலத்தை ஆளும் மனிதனின்
ஆறறிவு தத்துவத்தை
அன்றே சொன்னது தொல்காப்பியம்
அண்டங்களைப் பற்றியும் அணுவைப் பற்றியும்
பண்டைக் காலத்தில் பகர்ந்த மாணிக்கர்
பரிணாம வளர்ச்சிப் படிநிலையோடு
உயிரினச் சுழற்சி வட்டமும் பகர்ந்தார்!

காணக் கிடைக்காத பல வான அற்புதத்தை
ஞானக் கண்கொண்டு பார்த்து அதை
வானசாஸ்திரமாய்க் கோர்த்து
தேடக் கிடைக்காத காலமாற்றத்தைத்
தெளிவாய்ப் படம் போட்டுக் கணித்து
வானசாஸ்திரம் மேற்கில் தோன்று முன்
நாம் காண சாஸ்திரம் படைத்தார்!

மின்னல் வருவதை மழைவருவதை
முழக்கம் வருவதைக் கூட
மேற்கின் கண்ணில் தெரிவதற்கு முன்னே
மெஞ்ஞானத்தில் கண்டாள் கோவை
ஆண்டாள்
ஈராயிரம் ஆண்டிலே இராமாயணத்திலே
இருந்தது புட்பக விமானம் அதைப் பாராமல்
பதினெட்டாம் நூற்றாண்டில் வில்பர், றைட்
பண்ணியதே ஆகாய விமானம்!

சூரிய கிரகணம் சந்திர கிரகணம்
சுழலும் பூமி கோளங்கமெல்லாம்
மகாபாரதத்தில் உள்ளதென்று
மாக்ஸ் முல்லர் சொன்னார்
ஆரியப் பட்டர் பூமியைப் பற்றி
ஆயிரத்து ஐநூறு ஆண்டு முன் சொன்னார்
பூமி தன் அச்சில் சுழல்கின்றதென்ற
புதுமையை உலகிற்குத் தந்தார்
ஏழு நூற்றாணடின் பின் கோப்பர் நிக்கஸ்
பூமி சுழல்கின்றது என்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளி பபற்றியும் புவியீர்ப்பு பற்றியும்
விளம்பியது சித்தாந்த சிரோண்மணி
12ம் நூற்றாண்டு பாஸ்கராச்சார்
மெஞ்ஞானக் கண்டுபிடிப்பாகும் இது!

பைதகரஸ் பை ஆர்வர்க்கம் எனப்
பரப்பளவைச் சொல்லு முன்
பழந்தமிழர் நூலில் பாடினியார்
வட்டத்தரை கொண்டு விட்டத்தரை தாக்கின்
சட்டெனத் தெரியும் குழியென்றார்!

அணுவைப் பற்றிக் கூறிய அவ்வையும்
மழையைப் பற்றிக் கூறிய ஆண்டாளும்
பரப்பைப் பற்றிக் கூறிய பாடினியாரும்
அறிவைப் பற்றிக் கூறிய தொல்காப்பியரும்
தமிழரன்றோ மெஞ்ஞானத் தமிழரன்றோ!
அகத்தில் தேடியவன் மெஞ்ஞானி!
புறத்தில் தேடியவன் விஞ்ஞானி!

அகப்பாட்டில் எம்மறிஞர்
அறிந்த விடயமெல்லாம் மேற்கில்
செயற்பாட்டில் செய்தார்கள்!
செம்மையுற வைத்தார்கள்!
அகப்பாட்டில் இருக்கும் உணர்வை விட
செயற்பாட்டில் செய்வது தான் உண்மை
இதைத் திடப்பாடாய்க் கொண்டு
ஈழத்தமிழன் கடும்பாடு படுகிறான்
களம் நோக்கிச் செல்கின்றான்.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம்

எமது இயக்கம் உருவாகியது இலங்கையில் யாழ்நகரில், அதன் ஆரம்பத் தலைவர் காலஞ் சென்ற பேராசிரியர் சாலை இளந்திரையன் ஆவார். இவர் இந்தியாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அவரின் பின் காலஞ்சென்ற பேராசிரியர் வீரப்பளார் தலைவரானார். இவர் மலேசியாவைச் சேர்ந்தவர். இவர் 1999ல் எமது இயக்கத்தின் 7வது உலகமாநாடு சென்னையில் நடைபெற்று முடிந்த பின் இறைவனடி சேர்ந்தவர் அவரைத் தொடர்ந்து நான் தலைவரானேன்.

இவ்வியக்கம், இந்தியாவிலோ, இலங்கையிலோ, மலேசியாவிலோ, சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்படவில்லை. மலேசியாவில் பதிவு செய்யப்பட்டிருப்பது "மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்" (MALAYSIAN MOVEMENT FOR TAMIL CULTURE)

ஆகவே தான் உலகத்தமிப் பண்பாட்டு இயக்கம் (I.M.T.C) கனடா அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கமைய 2000 ஆண்டு பதிவு செய்யப்பட்டு அதன் தலைமையகம் கனடாவில் 936 mccowan Road, Scarborough ON. M1P3H6 Canada என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

இந்தியச் சட்டங்களின் கீழ் இயக்கம், கழகம் என்ற சொற்பிரயோகம் பாவித்தால் அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலாகக் கணிக்கப்படுகிறது. மலேசியாவில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் என்று பதிவு செய்ய அந்நாட்டுச் சட்டம் இடங் கொடாதபடியால் தான் மலேசியாத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் எனப் பதிவு செய்யப்பட்டது. தற்பொழுது இலங்கையில் இவ்வியக்கம் பதிவாகியுள்ளது.

கனடா ஒரு பல் கலாச்சார நாடு என்ற காரணத்தினால் எமது இயக்கம், அரசாங்கத்தின் ஆதரவுடன் செயற்பட முடிகிறது. ஆனால் இவ்வியக்கத்தின் தலைமையகம், தமிழ்த்தாய் நிலங்களில் ஒன்றில் அமைவது தான் சாலச்சிறந்தது. ஆகவே இவ்வியக்கம் உருவாகிய இலங்கையில், யாழ்ப்பாணத்தில் இயங்குவது தான் உகந்தது. ஆகவே உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கக்கிளைகள் அனைத்தும் ஒற்றுமையாக யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு கட்டிடத்தை அமைத்து தலைமையகத்தை இயக்க வைப்பது அவசியமெனக் கருதுகிறேன். அதன் பின் தமிழ் நாட்டிலும் புதுவையிலும் கட்டிடங்கள் அமைத்து, எமது அங்கத்தவர்கள் எந்த நாட்டிலிருந்தும், அவ்விடங்களுக்குச் செல்லும் பொழுது, அவர்களுக்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுத்தால், எமது இயக்கம் நன்றாக வளருமென்பது என் கணிப்பு

ஆகவே, இலங்கையில் யாழ்ப்பாணத்தில் எமது இயக்கத்துக்கு ஒரு பணிமனை அமைக்கும் வரை கனடா தான் தலைமையகமாக இருப்பது, பல காரணங்களுக்காகவும் உகந்தது பத்தாவது மாநாட்டில் இவ்விடயம், பூரணமாக ஆராயப்பட்டு ஒரு திடமான முடிவெடுக்கப்படும். எமது இயக்கக்கிளைகள் அனைத்தும் மேற்கூறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து தங்கள் கணிப்புக்களைத் தலைமையகத்திற்கு அறிவிக்குமாறு வேண்டப்படுகறீர்கள்.

சி. செல்லையா
(தலைவர்) – கனடா

## இலங்கை மாநகர்

இலங்கிய மாநகர் இலங்காபுரி ஈழநாட்டின் தலைநகராக இலங்கை நகர் விளங்கியது. மன்னன் குபேரன், மயன் சிற்பியினால் அகத்தியர் ஆலோசனைப்படி இந்த நகரை நிர்மாணித்தவன். அமராவதியைவிட சிறந்த அழகுடன் இலங்கை மாநகர் திகழ்ந்தது.

உயர்ந்த சாதிக் குதிரைகளும் எண்ணற்ற யானைகளும் நாட்டில் நிரம்பி இருந்தன. சிறந்த தேர்களும் ஆகாயத்தில் பறக்கும் விமானங்களும் இந்த நகருக்குத் தனிச் சிறப்பைக் கொடுத்தன. தேவர்கள் நாகர்கள், முனிவர்கள், சித்தர்கள், இயக்கர்கள் புலவர்கள் அடிக்கடி அரண்மனைக்கு வந்து குபேரனைச் சந்திப்பது வழக்கம்.

"இராவணேசுவரன் இந்திர உலா"

(நூலில் இருந்து நூலாசிரியர் – பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.த.ப இயக்கம் இலங்கைக் கிளைக்கு கொழும்பில் ஒரு கிளை அமைவு

11.05.2005இல் கொழும்பு மாநகரில் அமைந்துள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உ.த.ப இயக்கத்தின் அகிலத் தலைவர் தமிழ்ச் செம்மல் திரு.சி.செல்லையா அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைக்கு கொழும்பில் கிளை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதில் பல தமிழ் ஆர்வலர்களும் தமிழ் அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

பின் வருவோர் கொழும்புக்கிளையின் செயறகுழுவுக்கு தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் டாக்டர் மு. கதிர்காமநாதன் துணைத்தலைவர் டாக்டர் ஜின்னா செரிபுதீன், திரு.ரகுபதி பாலசிறீதரன், செயலாளர் -திரு. த. சிவஞானரஞ்சன், துணைச்செயலாளர் திரு - மா. கணபதிராஜ், பொருளாளர். திரு.ச. இலகுப்பிள்ளை செயற்குழு உறுப்பினர்கள்.

திரு. க. தம்பிராஜா
திரு. எஸ் பாலசுப்பிரமணியம்
திரு. மு. பிள்ளையானார்
திரு. ஆ. கந்தசாமி
திரு. ளு சிவசுப்பிரமணியம்
திரு. சி. அமிர்தலிங்கம்
திரு. அ. சங்கரநாராயணன்
திரு. தா. சண்முக நாதன்

மகளிர் அணி
திருமதி .அ. புவனேஸ்வரி

இளைஞர் அணி
திரு. கோ. சங்கர்

காப்பாளர்
தமிழ்வேள் திரு. க. கந்தசாமி
கலாநிதி திரு.குமாரசாமி சோமசுந்தரம்

## ஆள்வினையுடமை

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய் வருந்தக் கூலி தரும்.

திருக்குறள்

யானென மதன்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

துறவு – திருக்குறள்

திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகத் தொன்மை வாய்ந்ததும் பெருமை பொருந்தியதும் ஆகும். மிகவும் சீர்திருத்தியதுமான உயர் தனிச் செம்மொழியும் ஆகும். சொல்வளமும் மிகுந்தது. அளவிடவொண்ணாப் பண்டைக்காலம் முதல் பயின்றும் வருவது.

ஐரோப்பிய அறிஞர் கிரியர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதங்களில் தமிழர் கீதம்

ஆக்கியோன். இளநாவலர் உதயகரன் துரைராஜா
BASc (Hon) Dicp . Amiee P. EnG

**வெளியீடு கனடா 2001**

கனடாவில் வாழ்ந்து தமிழ்ப் பணி செய்துவரும் இளநாலவர் உதயகரன் துரைராஜா அவர்கள் கனடா நாட்டிலும், அமெரிக்காவிலும் பல கவியரங்குகளில் பங்குபற்றி புகழ் பரப்பி வரும் பெருமைக்குரிய கவிஞர். இவர் கீதங்களில் தமிழர் கீதம் என்னும் நூல் ஒன்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டிருக்கிறார். இந்த நூலில் உலக நாடுகளில் தற்போது நிலவிவரும் தேசிய கீதங்களின் விபரங்கள் உள்ளன. இதில் ஈழத் தமிழ் தேசத்தின் தமிழ்க் கீதங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த நூல் சிறப்பு மிக்க பயனுள்ள நயத்தகு வெளியீடென்றால் மிகையில்லை.

இது யாவரும் படித்துப் பயன் பெற வேண்டிய பனுவலாகும். குறிப்பாக மாணவ சமுதாயம் இதனைப் படிக்க வேண்டும். இவருடைய இந்த நூல் சில மாதங்களுக்கு முன்னர் இங்கே எமக்கு அனுப்பிய உதவினார் இதற்காக மிக்க நன்றியுடையோம். இவரின் தமிழ்ப் பணிகள் உயர்ந்து ஓங்கி வளர வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர் -

நூலாசிரியர் முகவரி
Elanaavalar. Uthayakaren Thurairajah
111 Empringham DR.
Scarborough ont
M1B4A6
Emnail uthayakaren Yohoo. Com.
T/P. 416-287.6171 - 416- 614 - 2244

## அட்டைப்பட விளக்கம்

1. புதுவையில் - புதுவை சட்ட சபைச் சபாநாயகர் - அகிலத்தலைவர் திரு. சி. செல்லையா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்குவதை படத்தில் காணலாம்.
2. முல்லைத்தீவில் சூனாமியால் அழிந்த பனந் தோப்பில் ஒரு பகுதியை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பெயரில் பலரும் எழுதலாம்
# உகந்ததை ஏற்பதே உயரிய பண்பு



மதிவாணர் செ. மதுசூதனன்
கோண்டாவில், இலங்கை

தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறள் பாடிய திருவள்ளுவரின் சகோதரி எனக் கருதப்படும் சங்ககால ஔவையார் என்பவர் ஒரு புலவர். அதியமானிடம் இரு நெல்லிக் கனிபெற்றவரும், ''சிவத்தைப் பேணிற்றவத்திற்கழகு'' ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' ''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' ''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'' ''நோன்பென்பதுவே கொன்று தின்னாமை'' ''கோனமென்பது ஞானவரம்பு'' ''வையந் தோறும் தெய்வந்தொழு'' ''திருமாலுக்கடிமை செய்'' என்றும் ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே'' என்றும் பாடியவரும் ஔவையாரெனப் படுகின்றார்.

''பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை. நாலும் கலந்துனக்கு நான்தருவேன், கோலஞ் செய் துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றும்தா'' என்று தொடங்கி நல்வழிபாடிய ஔவையார் ''நீறில்லாத நெற்றிபாழ், நெய்யில்லா வுண்டிபாழ்'' என்றும் ''ஒன்றை நினைக்கினது வொழிந்திட்டொன்றாகும். அன்றி அது வரினும் வந்தெய்தும் ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்'' என்றும் பாடியதோடு ''சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொருநாளுமில்லை'' என்றும் ''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும் முனிமொழியும் கோவை திருவாசகமும், திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்'' என்று பாடியவரும். ''வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம், மாமலரால் நோக்குண்டாம், மேனிநுடங்காது. பூக்கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு'' எனத் தொடங்கும் மூதுரை பாடியவரும் ஔவை யாரே! ''சீதக்களபச் செந்தாமரைப் பூம் பாதச் சிலம்பு பல விசை பாட'' எனத் தொடங்கும் விநாயகரகவலைப் பாடியவரும் ஔவையாராம். ''வரப்புயர நீருயரும்'' என்று தொடக்கியவரும், ''கோயிலில்லாவூரிற் குடியிருக்க வேண்டாம் என்றவரும் ஔவையாரேயாம்.

மூவர் கோவையும், மூவிளங் கோவையும், பாடியவென்றன் பனுவல் வாயால் எம்மையும் பாடு வென்றனிர்! நும்மையில் கெங்ஙனும் பாடுகென்யானே! வெங்கட் களிறுபடுசெங்களங் கண்ணிற் காணீர், வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர், புலவர் வாய்ச் சொற்புலம்பலுக்கிரங்கீர், அவிச்சுவையல்லது தமிழ்ச் சுவை தேரீர், உடீஇருண்ணீர், கொடி இர் கொள்ளீர், ஒவ்வாக் காளத்துயர் மரம் பழுத்த, துவ்வாக களியென தோன்றிய நீரே, என்று புலவரைப் பாடேனென்றுரைத்தவரும் ஔவை யாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மதியாதார் முற்றம் மிதித் தொருகாற் சென்று மதியாமை கோடியுறும்.

2. "உண்ணீருண்ணீரென்றே உபசரியார் தம் மனையில் உண்ணாமை கோடியுறும்"

3. "கோடி கொடுத்துங் குடிப் பிறந்தோர் தம்மோடு கூடுவதே கோடியுறும்"

4. "கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடைநாக் கோடாமை கோடியுறும்"

என்ற நாலுகோடி கவி பாடியவரும் ஔவையாரே!

முருகனிடம் சுட்டபழம் (நாவற்பழம்) பெற்றவரும் "இனியது கேட்கின் தனி நெடுவேலாய், இனிது இனிது ஏகாந்தம் இனிது எனத் தொடங்கும் பாடலைப் படியவரும், பழம் நியப்பா! ஞானப் பழம் நீயப்பா! என்றவரும் ஔவையாரெனப்படுகின்றார்.

இப்படியாக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, விநாயகரகவல் மற்றும் பல தனிப் பாடல்களையெல்லாம் பாடியவர்களையெல்லாம் எந்த எந்த ஔவை யார் எதைப்பாடினார், எக்காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சிந்திக்காமல், எல்லா ஔவையார்களையும் ஒருவரென்றெண்ணிடும் மக்களையே இன்று நாம் காண்கின்றோம்.

## விநாயகர் வழிபாடு

பிள்ளையாரெனப்படும் விநாயகர் வழிபாடு என்ன வென்றறியாத சங்ககாலத்து ஔவையாரையும் இடைக்காலத்து ஔவையாரையும், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் காலத்து ஔவையாரையும் கம்பர் காலத்து ஔவையாரையும் ஒருவரெனக் கொள்வது சரியானதா? விநாயகர் பூசை செய்து கொண்டிருந்த ஔவையாரை சுந்தர மூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் சேர்ந்து குதிரை மீதேறிக் கைலாயம் புறப்பட்டவேளை, பூசையை விரைவாக முடித்து விட்டு விரைவாகத் தம்முடன் வருமாறு அழைத்ததாகவும், அதற்கு ஔவையார், "உங்களுக்காக நான் எனது பூசையை வேகப்படுத்த மாட்டேன், விநாயகர் பூசையே எனக்குக் கைலாயம்" என்று கூறியதாகவும், பூசை முடிவில் விநாயகர் பிரசன்னமாகி, அவரை அப்படியே தனது துதிக்கையால் தூக்கி ஒரே வீச்சில் கைலாயத்தில் சேர்த்து விட்டதாகவும், அதன் பின்னரே சுந்தர மூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலை சேர்ந்ததாகவும், ஔவையார் பற்றிய ஒரு கதையுண்டு.

இதனையே அருணகிரிநாதர் தம் பழனித் திருப்புகழில், "நாதவிந்து கலாதி நமோ நம..... எனத் தொடங்கி "ஆதரம்பயிலாரூரர் தோழமை சேர்தல் கொண்டவரோடே முனாளினில், ஆடல்வெம்பரி மீதேறி மாகையிலையில், ஆதியந்த விலாவாசுபாடிய சேரர் கொங்குவைகாவூர் நனாடதில் ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே" என்றுபாடி முடிக்கின்றார் அப்பர், சம்பந்தருக்குக் பிற்பட்டவரே சுந்தரர். நாளும் இன்னிரையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தருக்கு தாள மீந்தவர்" என்று சுந்தரர் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. சுந்தரர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொங்கணர்.

"பண்டுமுளைப்பதரிசியே யானாலும், விண்டுமிபோனால் விளையாதென்று, கண்டு கொண்டு முன்னே ஔவை சொன்னாளதுவுண்டோ வில்லையோ வாலைப் பெண்ணே" என்றும், "காரியனாகிலும் வீரியம் பேசவும் காணாதென்று ஔவை சொன்னாளே, பாரினில் வம்புகள் செய்யாதே புளிப்பழம் போலுதிர்ந்து விழுந்தானே" என்றும் வாலைக்கும்மிபாடிய கொங்கெணர் என்ற ஒரு சித்தர் சொல்லுகின்றார். இவரைத் திருமழிசை ஆழ்வார் காலத்தவரென்றுரைப்பர். 7 ஆம் நூற்றாண்டெனலாம். வள்ளுவர் வாசுகி கதையிலும் ஒரு கொங்கண முனிவர் பிச்சை கேட்டுவந்ததாகவும், சொல்லப்படுகின்றது. இவர்கள் ஒருவரா?

### இடைக்காடரும் திருவள்ளுவரும்

சங்ககாலத்தில், அகநானூறு புறநானூறு, குறுந்தொகை, திருவள்ளுவமாலை போன்ற நூல்களில் பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ள இடைக்காடர் என்ற புலவரையும் "எல்லா உலகமும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும் எண்ணரிய வல்லாளன். ஆதிபரமசிவனது சொல்லாலாகுமே கோனாரே" என்றிவ்வாறாகப் பல பாடல்களைப் பாடிய சித்தராகிய இடைக்காடரையும் ஒருவரெனக் கொள்வாருமுண்டு. தமிழ்ப் பொது மறையாம் திருக்குறளைப் பாடிய திருவள்ளுவரையும் "அண்ட பிண்டம் நிறைந்து நின்ற அயன்மால் போற்றி" என்று தொடங்கும் திருவள்ளுவர் ஞானம் என்ற ஞானப் பாடல்களைப் பாடிய திருவள்ளுவரையும் அவ்வாறே ஒருவரென மயங்கும் மக்களும் உளரே! வடமொழியில் இராமாயணம் பாடிய வால்மீகியையும், "இருள் வெளியாய் நின்ற சிவபாதம் போற்றி, எழுத்தனின் விபரத்தை விரித்துச் சொல்வேன்" என்று தமிழில் ஞானப் பாடல்களைப் பாடிய சித்தர் வால் மீகரையும் ஒருவரெனக் கொள்வாருமுண்டு.

## அகத்தியர்.

மிகப் பழங்காலத்தில் வட நாட்டவர் தென்னாட்டிற் புகுவதற்கு பேரரண் போல் விளங்கிய விந்திய மலையும் அடர்ந்து செறிந்து விளங்கிய அடவிகளும் தடையாயிருந்தன. அகத்திய முனிவர் என்பவர், வடக்கிலிருந்து விந்திய மலையைக் கடந்து வழிகண்டு பிடித்துத் தென்னாட்டிற்குப் பதினெண் குடி அரசர்களும், வேளிரும் சூழ வந்தாரென்றும், அக் காலத்தில் தென்னாட்டை ஆண்டிருந்த இராவணனோடு இசைவாதில் வென்று நாட்டைத் தமதாக்கி, காடுகளை அழித்து, குடியிருக்கக் கூடிய நாடாக்கித் தம்முடன் வந்தவர்களைக் குடியேற்றி, வாழச் செய்தாரென்றும் பொதியில் மலையைத் தமக்கு இருப்பிடமாக்கிக் கொண்டாரென்றும் கூறுவர்.

நடு நில்லாதிவ்வுலகஞ் சரிந்து, கெடுகின்ற தெம்பெருமானென்ன ஈசன், நடுவுள அங்கி அகத்திய நீபோய், முடுகிய வையத்து முன்னிரென்றானே! என்றும் "அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன், அங்கி உதயஞ்செய் மேல் பாலவனொடு, மங்கி உதயஞ் செய் வடபால் தவமுனி, எங்கும் வளங்கொள் இலங்கொளிதானே" என்று திருமூலர் திருமந்திரத்தில் உரைப்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆதி சிவன் பெற்றுவிட்ட என்னை ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர், வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறைமேவும் இலக்கணஞ்செய்து கொடுத்தான்" என்று சுப்பிரமணிய பாரதியார் தமிழ்த்தாய் கூற்றாகப் பாடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

"சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்" என்றும் "மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா, மனமது செம்மையானால் வாயுவையுயர்த்த வேண்டா, மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம், மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே" என்றும் ஞானப் பாடல்களைப் பாடிய அகத்தியரையும், வேத, புராண காலங்களிலும், பழந்தமிழ்ச் சங்க காலத்திலும், மத்திய காலத்திலும் முனிவர்களாகவும், புலவர்களாகவும் மருத்துவர்களாகவும், சோதிடர்களாகவும் விளங்கிய அகத்தியர்களையும் ஒருவர் எனக் கொள்பவர்களும் உண்டு.

கற்றவர்கள் முதல் கல்வியறிவற்றவர்கள் வரை எல்லோரும் உற்றுணர்ந்து கொள்ளாமல், எல்லாம் ஒருவரையே குறிப்பாக எண்ணும் நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகவே இவைகளையெல்லாம் இங்கு குறிப்பிடப்படுகின்றன.


VICKNAA





விக்னா

கல்வி நிறுவனம்

இலங்கையில் யாழ்நகரில் புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனம் இதுவாகும்.

புகழ்பெற்ற கல்விமான்கள் இங்கே பணியாற்றி வருகின்றனர்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஓர் உன்னதமான நிறுவனம் விக்னாகல்வி நிறுவனமாகும் ஆகும்.

52, Stanley Road,
Jafna,
Sri Lanka.

52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
இலங்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவலர் பேராசிரியர் திரு. கதிர் முத்தையன் அவர்களின் ஆதங்கம்

**உ**.த.ப இயக்கம் பல பிரிவுகளாகச் சிதைந்து போய்விட்டது. நான் எவ்வளவோ முயற்சி செய்து ஒருங்கிணைக்க முயன்றேன். முடியவில்லை. எனவே அமைதி வழியாகத் திருக்குறள் பணிகளை மேற்கொண்டு வருகிறேன்.
தாங்கள் புதுச்சேரிக்கு வந்து சென்றது எனக்குத் தெரியாமல் போய்விட்டது. இல்லையேல் சந்தித்து இருப்பேன்.

செய்ய வேண்டிய அடிப்படைப் பணிகள் ஆயிரம் உண்டு அதிலே கவனஞ் செலுத்த வேண்டும் நான் குல, மத, கட்சி சார்பின்றியும், தன்னல வணிக, விளம்பர நோக்கின்றியும் தமிழ்த் தொண்டு செய்து வருபவன் எல்லோரும் இணைந்து செய்ய வேண்டிய பணிகள் ஆயிரம் இருக்கும் போது தனித்தனியாகப் போய் எதைச் சாதிக்க முடியும். காலந்தான் ஒருங்கிணைப்பை உருவாக்கிட வேண்டும். போகட்டும்.

"திருக்குறள் தொண்டூழியம்" என்னும் இருமாத இதழ் தொடங்கியுள்ளேன். விரைவில் அனுப்பி வைப்பேன்.

-நன்றி-

*பேராசிரியர் பாவலர்*
*திரு. கதிர்முத்தையன் அவர்களின்*
*மடல் தந்த கருத்து*

# 10 ஆவது உலக மாநாடு அந்தமானில்

**உ**லகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 10 ஆவது உலகமாநாடு 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அந்தமான் யூனியன் பிரதேசத்தில் நடாத்துவதற்கு உ.த.ப.இன் தலைமையகம் தீர்மானித்துள்ளது. மாநாட்டை அந்தமான் நாட்டில் சிறப்புடன் நடாத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அந்தமான் கிளை செய்து வருவதாகக் கிளையின் பொறுப்பாளர் திரு.சுப.கரிகால்வளவன் அவர்கள் அறிவித்துள்ளார். மாநாடு தொடர்பான மேலதிக விபரங்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து வெளிவரவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கத் தமிழர்கள் யாழ்ப்பாணம் வருகை

பதினைந்துக்கு மேற்பட்ட தென்னாபிரிக்காத் தமிழர்கள் இந்த ஆண்டில் ஆடி மாதம் 08ஆம் நாள் அன்று முதன் முறையாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்கள். அவர்களுக்கு உ.த.ப. இயக்கத்தின் இலங்கைக் கிளைப் பிரமுகர்கள் சிறப்பானதொரு வரவேற்பும் விருந்துபசாரமும் அளித்தார்கள்.

உ.த.ப இயக்கத்தின் அகிலப் பொதுச் செயலாளரும் இலங்கைக் கிளைத் தலைவருமாகிய தமிழ்ப்பணிச் செல்வர் திரு. ஆ.சண்முகலிங்கம் இந்த நிகழ்ச்சிக்குத் தலமை வகித்தார் அவர் தனதுரையில் தென்னாபிரிக்காத் தமிழர்களின் வரலாற்று விபரங்களைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். இவரின் உரையை சட்டத்தரணி, திரு. பொன். பூலோகசிங்கம் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்த அகிலத்தலைவர் தமிழ்ப் பணிச் செம்மல் திரு. சி. செல்லையா அவர்கள் தென்னாபிரிக்காத் தமிழர்களைச் சிறப்பித்து உரையாற்றினார். தென்னாபிரிக்காத் தமிழர் குழுவில் உ.த.ப. இன் துணைத்தலைவர். திரு. கிரிஸ். கிஸ்ரன், திருமதி. தனஞ்சம்மா, திரு. தயாளன் முத்து, திருமதி குப்பம்மா முத்துமாணிக்கம் போன்றோர் சிற்றுரையாற்றினார்கள். சட்டத்தரணி திரு.பொன்.பூலோகசிங்கம் திரு.சி.வ. ஆறுமுகசாமி ஆகியோரும் சிறப்புரை ஆற்றினார்கள்.

நிகழ்ச்சியில் தேநீர் விருந்துபசாரமும் நடைபெற்றது. நிகழ்ச்சி ஆரம்பத்தில் உ.த.ப.இன் இலங்கை கிளைச் செயலாளர். திரு.இ.தவகோபால் வரவேற்புரை நிகழ்த்தினார். பொருளாளர் திரு.செ.பரமநாதன் நன்றியுரை ஆற்றினார்.

அஞ்சல் முகவரி

1. உலகத்தமிழர் குரல் (ஆசிரியர் EDITOR)
   "Ulaga Thamilar Kural"
2. International Movement
   For Tamil Culture
   General Secretary
3. I.M.T.C. Sri Lanka Branch
   "Paramanathan House"
   Manipay Road,
   Thavady,
   Kokkuvil,
   Sri Lanka.
   T.P. / Fax 0094-21-2223294

**I.M.T.C Andaman Branch**

Address: Suba. Karikalvalavan
Portblair
P.O Bo. No. 295
Andamans 744101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு

## நாவலர், முத்தமிழ் வித்தகர்
## அறிஞர் திரு. அ.பொ. செல்லையா அவர்கள்

புகழ் பூத்த அறிஞர், நாவலர், முத்தமிழ் வித்தகர் திரு.அ.பொ.செல்லையா அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் மனத்துயர் அடைந்தோம். பல ஆண்டுகளாக எம்முடன் தனிப்பட்ட முறையிலும், உ.த.ப இயக்கத்தின் தமிழ்ப் பணிகள் தொடர்பிலும் அன்னார் அன்புறவில் தமிழுறவில் இருந்து வந்திருக்கிறார். பல மேடைகளைத் தமிழால் சிறப்பித்து மகிழ்வூட்டியவர். பல அரிய நூல்களை ஆக்கி தமிழ் அன்னைக்கு வளம் சேர்த்த பெருமகன் இவர்.

பல கல்விச்சாலைகளில் பல ஆண்டுகள் பேராசானாக விளங்கி ஆயிரக்கணக்கில் மாணவர்களை மாண்புடையோராக வழிகாட்டியவர். எம்முடன் இது நாள் வரை நேரிலும், அஞ்சல் வழியிலும் தொடர்புறவு கண்டு வாழ்ந்த பண்பினை நாம் என்றும் மறவோம். இவரின் மறைவு தமிழ் உலகிற்கு பேரிழப்பாகும். இவர் விட்டுச் செல்லும் தமிழ் வளர்க்கும் பணிகளை இவரின் பாசமிகு பிள்ளைகள் தொடர்ந்து செய்வார்களென்று நம்புகிறோம்.

அன்னாரின் மறைவினால் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் துணைவியார் மற்றும் புதல்வர்கள், குடும்பத்தவர்களுடன் நாமும் உ.த.ப இயக்கத்தின் சார்பில் துயர்பகிர்ந்து நிற்கிறோம்.

**- வணக்கம்.-**

**இங்ஙனம்**
**ஆ.சண்முகலிங்கம்**
**பொதுச் செயலாளர்**
**உ.த.ப இயக்கம்**
**தலைமையகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9வது உலக மகாநாடு
# நீதி மன்ற விடயம்

Mr. Thurai Ganeshalingam
Sciezbergen STR – 142
4843 Rheine
Germany,

Octpber 12 2005

Dear Mr. Ganeshalingam

Re. International Movement for Tamil Culture

This is in reply to you letter dated 20th June 2005 received by me on the 25th June 2005

Please be reminded that the registered Head quarters of IMTC is 936 McGowan Road, Scarborough, Ontario MIP 3H6, Canada, and not 28 Lintang Sclar Kaw 7SG Beruk 4100 Klang Sclangor, Malaysia. This address is recognized by Industry Canada, the Government agency that registered IMTC.

You claimed to have been the Secretary – General of the IMTC for nine years. It is my understanding that there is no IMTC functioning legally in Malaysia. The legally registered organization in Malaysia is the Malaysian Movement for Tamil Culture. I am advised that is why the IMTC was registered in Canada under Canadian federal law on June 7, 2000. The first four directors were Mr.S. Chelliah, S. Yogarajah, Manuel Jesudasan and K.T Ganeshalingam

I categorically reject your suggestion that my letter of May, 2005, violates the human rights of the parties mentioned in your letter. On the contrary, if my information is correct. They acted in contravention of the accepted principle of consulting the valid representatives of the IMTC before acting. in any event, I know of on principle of human rights law which is in issue.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I reconfirm that I acted as the legal representative of the IMTC Headquarters in Canada, and I have been fully informed with regard to the history of the IMTC and also the Pondicherry Court records of the case. O.S. No. 612 of 2004. Mr. S. Chelliah, President on the international Movement of Tamil Culture (IMTC) petitioned the Pondicherry Court to enjoin Messrs. Veera Madhurakavi and K.T. Ganeshalingam from holding the Ninth international Conference on Tamil Culture August on 14, 15 and 16. 2004 . The defense lawyer. Mr. Ravichandran advised the court that they were not holding the Ninth. International Conference on Tamil Culture of the IMTC, but were holding an international Tamil Conference. On that condition they were allowed to hold a conference and Mr. Chelliah's prayer for an injunction was dismissed. It follows that the election of officers on August 16, 2004 is unconstitutional, in that the election of officers was held at a duly constituted international conference held in Pondicherry on 10, 11 and 12 July 2004.

According to my records and information Mr. Chelliah continues as President of the IMTC. unanimously elected at the Ninth International Conference on Tamil Culture of the IMTC held in Pondicherrry, India on the 10, 11, and 12 July 2004 Industry Canada has accepted that listed directors of the IMTC for the period ending March 31, 2006. Taking the foregoing into consideration, I advise you to wait for the Tenth International Conference of the IMTC to be held in 2006, at which all duly elected representatives of the IMTC will be given their democratic right to express their views and elect new directors of the organization.

Yours truly,

Baker Law Firm
Samuel. R Baker Q.C

குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்

ஆற்றங்கரை அரசமரமும் அரசோடு
வீற்றிருந்த வாழ்வும் ஒருநாள் வீழும்

- அதிவீர ராம பாண்டியன்-

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும்

- அறிஞர் அண்ணா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P.Jeyapalan Bsc.B.L
Advocate
"Shanti Illam"
64 Rajajan Street,
Raja Nagar
Pondchery - 13
T.P 221679
25.01.2005

Mr.Sinnathamby Chelliah,
President, International Movement for Tamil Culture,
Canada Hqrs.

Respected Sir,

Sub: O.S.No.612/2004 – Regarding

With reference to the above, I submit the following for your information.

The defendents in the above case, produced an Invitation in which it was admitted to the Hon'ble Court that they are not conducting the 9th International Conference of the International Movement for Tamil culture (IMTC) but only in the name of International Tamil Festival. In view of their submission to the court, the Court declined to give the order as we prayed for.

I am analysing for a certified invitation of the defendents from the Court and I will furnish the same in a few days.

Thanking you.
Yours faithfully,
P.Jayabalan

## முத்தொள்ளாயிரம்

அழகிய தமிழில் பாடப்பெற்ற 2700 பாடல்கள் கொண்ட நூல். மூவேந்தர் மீது பாடப்பட்டவை. இதில் 108 பாக்களே கிடைத்திருப்பவை.

குண்டலகேசி - இது ஒரு பௌத்த சமய நூல்.

வளையாபதி நூல் - சமண சமய நூல்

இந்த இரண்டும் முழு வடிவத்தில் இப்பொழுது கிடைக்கவில்லை.

அறிஞர் கதிர் தணிகாசலம்
உடுப்பிட்டி
(தமிழ்மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம், தலைமையகம், (கனடா) விடுக்கும் 2006ம் ஆண்டு தமிழர் புத்தாண்டுத் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்களும் எதிர்பார்ப்புகளும்

2006ம் தமிழர் புத்தாண்டில் உலகெலாம் செறிந்து வாழும் தமிழர்களின் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு கலை கலாச்சாரம், வாழ்வியல் ஓங்கி வளர வாழ்த்துகிறோம். தமிழர்களின் நல்வாழ்வை உறுதி செய்ய உலகத்தமிழினம் ஒன்று படுவோம்.

ஈழததமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சிங்கள மக்களும் உலக சமுதாயமும் ஏற்று, இனப்பிரச்சினைக்கு, நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதை உலகத்தமிழினம் ஒன்றுபட்டு வலியுறுத்துவோம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாமதிக்காமல் தொடரவேண்டும் என்பதை வலியுறுத்துவோம்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் தங்கள் அரசியல் மதவேறுபாடுகளை மறந்து, தமிழ் நாட்டில் அனைத்துத் துறைகளிலும் தமிழ்மொழிக்கு முதன்மை வழங்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்தி சகல கல்விக்கூடங்களிலும், தமிழ்மொழியே பயிற்சி மொழியாகவும், ஆங்கிலம் 5ம் வகுப்பிலிருந்து இரண்டாவது மொழியாகவும் கற்பித்தல் வேண்டுமென்பதை வலியுறுத்தி இவ்வாண்டு வெற்றிகாண வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

சி.செல்லையா
அகிலத்தலைவர். உ.த.ப. இயக்கம்
கனடா

## கரசையில் அகத்தியர்

அன்று மாவலியின் கிழக்குப் பாய்ச்சல் வேகமாகவிருந்து அக்காலத்தில் அதன் கரையில் வளமான பிரதேசம் ஒன்று கரசை என வழங்கியது. அங்கே அகத்திய முனிவர் பெயரால் அகத்திய தாபனம் என்னும் திருக்கோயில் ஒன்று உண்டு. அது திருக்கரசை என்றே சிறப்பாக வழங்கி வரலாயிற்று. திவ்வியம் பழுத்த சிவாலையங்கள் மிகுதியாக இருந்த இலங்கை சிவபூமி எனவே முற்காலத்தில் வழங்கி வந்தது.

அறிஞர் க.சி.குலரத்தினம்
(தமிழ் தந்த தாதாக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர்களின் மனங்கவரும் ஆடைகள் - ஸ்கேட்ஸ் & பிளவுஸ்,
சல்வார் கிற்,இந்தியன் சாறி வகைகள், பேபி சூட் மற்றும்
சிறுவர்களுக்கான ஆடைவகை மற்றும் ஆண்களுக்கான
அழகிய ஷேட்டிங் சூட்டிங் சேட்ஸ் மற்றும் அனைத்து வகை
நவீன ஆடைத்தெரிவுகளுக்கு

சேலைகளின் நந்தவனம்

பட்டுச்சேலைகளின் பிருந்தாவனம்

# இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

# Rajeswariy Textiles



*106, Power House Road,*
*Jaffna,*
*SriLanka*
*T.P No: 021 2226953*

10G, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம் பிறின்ரேர்ஸ், கந்தர்மடம், யாழ்ப்பாணம்